விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 077 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தில் இலங்கை பின்னடைவு தண்டனை வழங்கப்படாத கலாசாரம் நீடிக்கிறது

## ஜெனிவாவில் ஐ.நா ஆணையாளர்

(ஜெனிவா)

இலங்கையில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை சர்வதேச உபாய முறைகளை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டைப்பொறுத்தவரையில் கடந்த வருடம் மிகவும் பின்னடைவு மிக்கதாகவே காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக தமது நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அது மறுக்கப்படுகின்றது. நம்பிக்கை, உண்மை மற்றும் நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித 11



# அதிகாரம் உண்டு ஆனால் இது தீர்வல்ல

## அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அரசிடம் சுதந்திரக் கட்சி எடுத்துரைப்பு

(கொழும்பு)

**அமைச்சர்களை நியமிக்கவும் பதவி நீக்குவதற்கும் கோட்டாவுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அமைச்சர்களை மாற்றியமைப்பதன் ஊடாக நிலவும் பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொள்ள சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடும் போதே இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர்களை நியமிக் 11

# எரிபொருள் இருப்பை பொறுத்து மின்தடை

(கொழும்பு)

எரிபொருள் இருப்புகளைப் பொறுத்து திட்டமிடப்பட்ட மின்தடை நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது அல்லது குறைக்கப்படலாம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின் துண்டிப்பை குறைப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட் 11

## தெல்லிப்பழையில்

# அதிகளவான போதை மாத்திரைகள் உட்கொண்ட இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

போதை மாத்திரைகளை அதிக அளவில் உட்கொண்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை, கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய கட்டடத் தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் வெள்ளிக் 11

# வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வைத்தியசாலையில் அனுமதி

## பொலிஸ் தாக்கியதாக குற்றச்சாட்டு சகோதரியும் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்டதாக கூறப்படும் வலி. தென் மேற்கு பிரதேச சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிகோவும், அவரது சகோதரியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று விசார 11

# ஐ.நா பிரேரணையை நிராகரிக்கின்றோம்

## ஜெனிவாவில் ஜி.எல். பீரிஸ்

(ஜெனிவா)

2021 ஆம் ஆண்டு ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட 46/1 பிரேரணையை தாம் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரில் தெரிவித்துள்ளார்.

அந்த பிரேரணை 11

## தமிழரின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்

ஐ.நாவில் இந்தியா

(03 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் உள்ள வெதுப்பகங்கள் மூடப்படும் அபாயம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இனிமேல் கடன் இல்லை; சீனா அறிவிப்பு

(03 ஆம் பக்கம் பார்க்க)

# போதுமான எரிபொருள் உள்ளது வரிசையில் நிற்க வேண்டாம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்

(கொழும்பு)

போதுமான எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளது. நாடு தழுவிய விநியோகம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். 11

# 14 பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 14 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர். 11


# அரசில் அங்கம் வகிக்கும் 16 சபை உறுப்பினர்கள்

## சுயாதீனமாக செயற்பட தீர்மானம்

(கொழும்பு)

அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த 10 கட்சிகளின் 16 உறுப்பினர்கள் 11

# சுதந்திரக் கிண்ணம் வடக்கு சம்பியன்



(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணைச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(10498)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**


## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2022

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.03.2022 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 13.03.2022க்கு முன்பதாக எழுத்துமூலம் சமர்ப்பிக்க வும். வதிவிட மாற்றம் உள்ளவர்கள் தயவோடு என்னுடன் தொடர்புகொள்ளவும்.

**"மத்தியின் மணிக்கொடி நீத்திலம் நிலைக்கும்"**

**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்.மத்திய கல்லூரி.**
**077420 2396**

(10499)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (இருபாலாரும்)

தொடர்பு

**077 830 8360**

(10501)

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள சுப்பர் கப் ஹொண்டா 50CC விற்பனைக்கு உண்டு.

(10476)

**077 942 0568**


# கொலையாளி தற்கொலை

குடும்பத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதன் காரணமாக மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த பின் சந்தேகநபரான கணவரும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்த சம்பவம் கொகரெல்ல - ரணவிருகம பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம)


Government TVEC Approved



## தாதியர் பயிற்சிப் பாடசாலை FLORENCE NIGHHTINGAL

## தாதியப் பயிற்சிநெறி - 2022

### நுழைவுத் தகைமை

- ◈ க.பொ.த சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல்.
- ◈ விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்.
- ◈ பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- ◈ பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
- ◈ தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்.

### கற்கை நிலையங்கள்

- ◉ மருதனார்மடம்
- ◉ நெல்லியடி
- ◉ சாவகச்சேரி



விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்

Viber - 077 718 6438,
Whatsapp - 077 482 4473
T.P. No - 077 718 6438

நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல்
தாதியர் பயிற்சிப் பாடசாலை

(10500)

**வலம்புரி** 021 221 7603, 021 567 1532
விளம்பரத் தொடர்புகளுக்கு


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 24.01.1964
மறைவு : 03.03.2022

## அமரர் கனகசபை பாஸ்கரன்

( யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் )


எப்போதும் எமக்கு முன்மாதிரியாகவிருந்த
வழிகாட்டியின்
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(10488)

**2 ஆம் அணி மாணவர்கள்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

# 14ஆம் ஆண்டு நினைவு நாள்

தாயின் மடியில் 21 - 01 - 1957



தாயக மண்ணில் 06 - 03 - 2008

## மாமனிதர் கிட்டினன் சிவநேசன்

**(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பொது முகாமையாளர் - வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்)**

தமிழினத்தின் உரிமையின் சிகரமாய் விளங்கிய
சிம்மக் குரலது சிதைந்து போனதால்தானோ
எம் தேசத்தின் கதிர்மேகக் கூட்டங்கள் – சேர்ந்தே
கதிரவனை மறைத்தது
ஆண்டுகள் பதின்னான்கு ஓடியே சென்றாலும்
வாடியே நிற்கின்றோம் அப்பா...

(C-3901)

தகவல்: குடும்பத்தினர்
"யார்க்கரு"

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சுந்தரம் ஈஸ்வரதாஸ்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.12.1926 | 10.03.2019 |

**திதி: சதுர்த்தி (06.03.2022)**

சென்றதுதான் மூன்றாண்டு
ஆனாலும் நெஞ்சில் நிறைந்திருக்கும்
நினைவாலே கண்கலங்கும்
என்றும் மாறாது நின்நினைவு நீளும்
இறையடியிருப்பீர்
என எண்ணி ஆறும் மனது

ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்
**குடும்பத்தினர்**
**077 959 8066**

கோட்டைக்காடு,

(10494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

(ஜெனிவா)

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.**




ஒன்றுபட்ட இலங்கைக் குள் சமத்துவம், நீதி, அமைதி, கௌரவம் ஆகியவற்றுக் கான தமிழ் மக்களின் எதிர் பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நா.ஆணையாளரின் இலங்கை தொடர்பான சமீபத் திய அறிக்கை குறித்த கலந்து ரையாடலின் போதே இந்தி யத் தூதுவர் இந்திரமணி பாண்டே, இதனை வலியுறுத் தினார்.

தமிழர்களின் நலனக ளைப் பாதுகாப்பது தொடர் பான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்த தனது உறுதி ப்பாட்டை இலங்கை அரசா ங்கம் நிறைவேற்ற வேண் டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதன் காரணமாகவே கட ந்த ஆண்டு இலங்கை மீதான தீர்மானம் மீது வாக்கெடுப்பில் இருந்து இந்தியா விலகியது என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசாங்கம் தொட ர்ந்து செயற்பட வேண்டும் என்றும் 13 ஆவது திருத்த த்தை அமுல்படுத்த வேண் டும் என்றும் இந்திரமணி பாண்டே கேட்டுக்கொண் டார். (நி)


60 ஆவது அகவைதின வாழ்த்து

(ஷஷ்டி அப்த பூர்த்தி விழா)

யா/ வரணி மகா வித்தியாலய அதிபர்

திரு. பரஞ்சோதி செல்வநாயகம்

SLPS-I



அன்புடனும் பண்புடனும் இனிதாகப் பேசியே
அன்புடன் பணிகளை ஆற்றியே
இன்றுடன் அகவையும் அறுபதும் ஆனதே
ஈவுடைய சிந்தனை மேலோங்கி நின்றதே
உன்னத பணிகளில் செயல் ஆற்றியே
ஊக்கமுடன் செயற்பட்டு உயர்வுகள் பெற்றீரே
எள்ளளவும் உம் பணியில் குறைகள் இன்றியே
ஏற்றம் காணவே அரும்பாடு பட்டீரே
ஐயம் இன்றியே அனைவரிடமுமே
ஒற்றுமையாகவே கூடி வாழ்ந்தீரே
ஓம் என்ற நாவின் சொல்லிலே
ஔவியம் இன்றி ஆண்டுகள் தோறும்
நீண்ட காலங்கள் நீடுழி வாழ்க !

அன்புடன் வாழ்த்தும்.. Best Wishes

கலாநிதி

சிவஸ்ரீ நா. கலாதரக்குருக்கள்

கோவிற்கடவை, துன்னாலை.

(C-3802)


## நாடு திரும்ப விரும்பும் இலங்கை மாணவர்கள்

# மொஸ்கோ செல்லுமாறு பணிப்பு

(கொழும்பு)

நாடு திரும்ப விரும்பும், பெலரஸில் உள்ள அனைத்து இலங்கை மாணவர் களும், மொஸ்கோவுக்கு பயணிக்கு மாறு வெளிவிவகார அமைச்சு ஆலோ சனை வழங்கியுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல் களை, மொஸ்கோவில் உள்ள இலங் கைத் தூதரகத்தின் 24 மணிநேரமும் இயங்கக்கூடிய 0079 801 445 726 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது slemb.moscow@mfa.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொண்டும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.(நி)

## இனிமேல் கடன் இல்லை

### அறிவித்தது சீனா

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் கடன் வழங்கு வதைத் தவிர்ப்பது குறி த்து சீன அரசாங் கம் தீவிரமாக பரிசீலித்து வருவதாக தகவல றிந்த வட்டாரங்கள் தெரிவித்து ள்ளதாக கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டு ள்ளது.

தற்போது கொழும்பில் இருக்கும் சீன அரசாங்கத்தின் உயர்மட்டக்குழுவொன்று, அரசாங்கத்தின் சில உயர்மட்ட அதிகாரிக ளுக்கு இந்தத் தீர்மானத்தை தெரிவித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)


வாழ்த்துகின்றோம்

திரு.மார்க்கண்டன் ரூபவதனன்




'மதிபதி' மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் பதுளை ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும், பொதுசன நிர்வாகத்துறைத் தலைவருமான மார்க்கண்டன் ரூபவதனன் அவர்கள் நீதி அமைச்சின் அகில இலங்கைச் சமாதான நீதவானாக வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.கண்ணன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு அவரைப் பாராட்டி அவரின் சமூக சேவைகள் தொடர வாழ்த்துகின்றோம்.

திருமதி.அ.கிருபாகனி (அக்கா) (யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை-ஆசிரியை)
திரு.செ.அன்ரனி பெனடிற் (அத்தான்) (கிருபாகனி புத்தகநிலையம், ஊர்காவற்றுறை)
அ.அபிஷன் (மருமகன்)

நோர்த்சீ லிமிடெட்

கடற்றொழில் அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம்

வெற்றிடங்கள்

தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொது முகாமையாளர்

(அ) தகைமைகள் மற்றும் அனுபவம்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனத்திலிருந்தான பொறிமுறை பொறியியல் / முகாமைத்துவம் / மனிதவளங்கள் துறையில் ஒரு இளமாணிப் பட்டம்

அத்துடன்

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டத் தகைமை (Masters) அல்லது பதவியின் விடயப்பரப்பிற்கு இயைபான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், சபை / நியாதிக்க நிறுவனம் அல்லது பிரசித்தி பெற்ற தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்

அல்லது

2. பதவிக்கு சம்பந்தப்பட்ட துறையில் (கணக்கியல் / இயந்திர பொறியியல்) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், சபை, நியாதிக்க நிறுவனம் அல்லது பிரசித்தி பெற்ற தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்

(ஆ) சம்பள அளவு: HM 1-3 - 86,865 -15 x 2,270 - 120,915/-

எரிபொருள் கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது 50,000.00 போக்குவரத்துக் கொடுப்பனவு உட்பட HM 1-3 வகுதியில் ஆரம்பச் சம்பளமாக (ரூபா 86,865.00) மாதாந்தம் உரித்தாகும் என்பதுடன் ஏனைய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(இ) வயது:

35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

நியமனத்தின் தன்மை

மேற்குறிப்பிடப்பட்ட பதவி EPF மற்றும் ETF உரித்து சகிதம் மூன்றாண்டு தகுதிகாண் கால அடிப்படையிலான நிரந்தர பதவியாகும்.

பொது நிபந்தனைகள்

- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சிறப்பான நன்னடத்தையுடன் பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அரசாங்கத் திணைக்களங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியாதிக்க சபையில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை தமது முழுமையான சுய விபரங்கள் மற்றும் உறவினரல்லாத இரு சான்றுபகிர்வோரின் விபரங்கள், கல்வி / தொழில்சார் அனுபவங்கள் மற்றும் முன்னைய வேலை அனுபவங்கள் சகிதம் 2022 மார்ச் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

தலைவர்,
நோர்த்சீ லிமிடெட்,
இல. 450, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு-10.

(C-3895)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 302 - 11 ஆவது சம்பள அளவுத் திட்ட எழுதுனர் பதவிக்கான பெண் ஊழியர் நியமனம்

| | |
|---|---|
| சங்கப் பெயர் | : யாழ்.சௌ.சே.கூட்டுறவு கடன் நிவிர்த்திச் சங்கம் |
| முகவரி | : போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். |
| பதிவு இலக்கம் | : J/1339 - 15.09.1955 |
| சம்பள அளவுத் திட்டம் | : 17190 - 170 x 10 - 185 x 10 = 20740 |
| விண்ணப்ப முடிவுத் திகதி | : 18.03.2022 |

**கல்வித் தகைமை:**

அ. கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத் திட்டம் பதவியில் எழுதுனர் / கணக்காய்வு எழுதுனர் / காசாளர் / கணனிப் பக்க உருவாக்குநர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றின் பயிற்சி நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்குப் பதிவியல் தொடர்பான பயிற்சிநெறிக்கான சான்றிதழ்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஒரு ஆண்டு கால அனுபவம்.

அல்லது

க.பொ.த உயர்தராதரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

விண்ணப்பப் படிவங்களை
**தலைவர் / செயலாளர்**
**யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவிர்த்திச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு என்வலப்பின் இடது பக்க மூலையில் 302-11 எழுதுனர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்** (10497)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி நடராசா



யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி நடராசா அவர்கள் நேற்று (05.03.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்ளான சுப்பையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் (கார் EY 2745) அன்பு மனைவியும் சாந்தினி, விஜயதாசன் (லண்டன்), ரவிதாசன், ரஞ்சினி (ஜேர்மன்), பாஸ்கரன், பகீரதன், கௌரி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சிறீதாசன், அமரர்களான சிறீபாலன், மகேஸ்வரன் மற்றும் பாலமுகுந்தன், உஷா, முரளிதரன் (யா/வசாவிளான் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமிர்தநாயகம், ரஜீவி (லண்டன்), சுதர்சினி, பத்மலிங்கம் (ஜேர்மன்), பாரதி, மகேந்திரராஜா (அதிபர் - கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை), விஜித்திரா (குடும்பநல உத்தியோகஸ்தர்), ம.சுபாசினி, பா.சுபாசினி, ஜெகதரபவன், அனிந்திதா (யா/மண்டைதீவு ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும் மௌலிகா, சுபீட்சன், யதுர்சிகா, யதுர்சனா, மகிழினி, தமிழினி, சிந்துஜன், தனுஜன், நிரோஜன், கீர்த்தனா (யாழ். பல்கலைக்கழகம்), அபிநயா, மதுவந்தி (ஊவாவெல்லஸ பல்கலைக்கழகம்), ஆரபி, கவின்மாறன், நிவிக்கா, தேனுசா, கரிகாலன், துளசிகா, நர்த்தனா, காருண்யா, சரண், அகரன், ஆருத்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவராசா, சிவபாலசிங்கம், சிவமலர், இரத்தினம், சிவானந்தம் மற்றும் அன்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, மாணிக்கம், இரத்தினம், அன்னலம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (53/9,4ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்) இன்று (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (10502)

தகவல்
குடும்பத்தினர்
077 354 9643, 077 617 6122



**ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி ஸமேத ஸ்ரீ பகவதே நமஹ**

அன்புடையீர்...!

அவதார புருஷர்களாகிய ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான் மனித குலத்திற்கு "ஜீவன் முக்தி" எனும் வரப்பிரசாதத்தினை அருளும் சங்கல்பத்துடன் இப்புவியில் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றனர். ஸ்ரீ கல்கி பகவானின் ஜென்ம தினமாகிய மார்ச் 7 ஆம் நாளை கல்கி பக்தர்கள் "உலக ஒருமை தினமாகக்" கொண்டாடி வருகின்ற அதேவேளை நாமும் அப்புண்ணிய தினத்தில் ஏகத்துவ சிந்தனையோடு கலந்து கொள்வதற்கு பகவத் சங்கல்பம் அமைந்துள்ளது.

**இடம் : மகேஸ்வரன் மண்டபம், நல்லூர் (நல்லூர் கோவில் வெளிப் பிரகாரம்)**
**காலம்: 7.03.2022 திங்கட்கிழமை மாலை 4 மணிமுதல்**

அன்றைய தினத்தில் சிறப்பு நிகழ்வாக மாலை 6.00 மணிக்கு இந்தியாவிலிருந்து நிகழ்நிலை (online) மூலமாக நேரடியாக ஒளிபரப்பப்படும் உலக ஒருமைக்கான தியானத்தில் கலந்துகொண்டு உலக ஒருமை அலையைக் கூட்டாக உருவாக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"பகவத் சேவையே மஹா ப்ரசாதம்" (இ)

**021 222 2314,**
**077 364 7436, 076 217 7697**

**ஏகத்துவ சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

# இந்தியா-பாகிஸ்தான் இன்று மோதல்

நியூசிலாந்தில் நடைபெறும் பெண்கள் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் மிதாலி ராஜ் தலைமை யிலான இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை, பிஸ்மாக்மரூப் தலைமையிலான பாகிஸ்தான் அணியை சந்திக்கிறது.

இந்த போட்டி மவுண்மாங்கானுவில் நடைபெறும்.

அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த இளம் வீராங்கனைகளை உள்ளடக்கிய இந்திய அணி பயிற்சி ஆட்டங்களில் தென் ஆப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளை வீழ்த் திய உற்சாகத்துடன் களம் இறங்குகிறது. சர்வதேச ஒரு நாள் போட்டியில் இந்தியாவுடன் மோதிய 10 ஆட்டங்க ளிலும் பாகிஸ்தான் அணி தோல்வியையே சந்தித்து இருக்கிறது.

இதனால் இன்றைய ஆட்டத்திலும் இந்திய அணியின் கையே ஓங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய நேரப்படி காலை 6.30 மணிக்கு தொடங்கும் இந்த போட்டியை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது. (4-6)

"பெண்ணின் பெருந்தக்க யாவுள"

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி நடாத்தும் தமிழ்த் தேசிய மகளிர் நாள் - 2022**

**காலம்: 2022.03.07 ஆம் திகதி திங்கட்கிழமை**
**இடம் : கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகம்**
**நேரம் : மாலை 3.00 மணி**

**தலைமை**
திருமதி கௌசலா ஜெயக்காந்தராசா
(தலைவி, கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணி)

**முதன்மை அதிதி**
திருமதி பானு பிரகாஷ்
(அரசியல் ஆலோசகர், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம், கொழும்பு)

**நிகழ்ச்சி நிரல்**

- விருந்தினர் வரவேற்பு
- கட்சிக் கொடியேற்றலும், கட்சிக் கீதம் இசைத்தலும்
- மங்கல விளக்கேற்றல்
- நினைவுச் சுடரேற்றல்
- அகவணக்கம்
- உறுதியுரை
- தமிழ்மொழி வாழ்த்து
- வரவேற்புரை
  திருமதி.கலைவாணி சிறீகாந்தன்
  (கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்)
- தொடக்க உரை
  திருமதி.யோகா பிரதாகரன்
  இணைப்பாளர்,
  ஆங்கில வள நிலையம், கிளிநொச்சி.
- வரவேற்பு நடனம்
  செல்வி.கலைநிலா ஜெயக்குமார்
  (கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி)
- தலைமையுரை
- நடன ஆற்றுகை
  சிவகலை நாட்டியாலயா, திருவையாறு
- "மண்ணின் மாதவம்" விருது வழங்கல்
- முதன்மை அதிதி உரை
- சிறப்புரை - "தமிழ் மக்கள் யாரை நம்பலாம்?"
  திரு. மகாதேவா நிலாந்தன் (அரசியல் ஆய்வாளர்)
- "தமிழ் முரசு" பாரம்பரிய இசைக்கலை நிகழ்வு
  சுழிபுரம் கலைமகள் கலாமன்றம்
- நன்றியுரை - திருமதி. யோகராணி நாகரட்ணம்
  (செயலாளர், மாவட்ட மகளிர் அணி)

(C-3900)

**அனைவரையும் அன்புரிமையோடு அழைத்து நிற்கிறோம்.**

**மகளிர் அணி**
**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**
**கிளிநொச்சி மாவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாடு ஒரே சட்டம் பாரபட்சமற்றது என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்

## இலங்கை தொடர்பான கோர்குழு அறிக்கை

(கொழும்பு)

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி, இலங்கையின் பன்மைத்துவ சமூகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அபாயம் உள்ளது என இலங்கை தொடர்பான கோர் குழு தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த செயலணி பாரபட்சமற்றது என்பதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கையின் நிலைமை தொடர்பாக கனடா, ஜேர்மனி, வடக்கு மசிடோனியா, மலாவி, மொண்டினீக்ரோ, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கோர் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வருவதற்கான முதல் முயற்சிகளைப் பாராட்டியுள்ள கோர் குழு, 46/1 தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம் குறைவாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பான முதற்கட்ட பட்டியல் வெளியிடப்பட்டதில் இருந்து, வழக்குகளை முழுமையாக விசாரிக்கும் பணியில், காணாமல் போனோர் அலுவலகம் மெதுவான முன்னேற்றம் கண்டு வருவது கவலையளிப்பதாக அறிவித்துள்ளது.

சிவில் சமூகத்தின் மீதான கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் பற்றி கவலை வெளியிட்டுள்ள கோர் குழு, ஊடகவியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை ஐ.நா. ஆணையாளருடன் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் 46/1 தீர்மானத்தை செயல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தயார் என்றும் கோர் குழு தெரிவித்துள்ளது. (நி)

# உட்கட்சி மோதலைக் கூட தீர்க்க முடியாத நிலையில் கோட்டா

(கொழும்பு)

அரச கூட்டுக்குள் உட்கட்சி மோதலைக்கூடச் சமாளிக்க முடியாமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திண்டாடுகின்றார். இந்நிலையில் நாடு பொருளாதார ரீதியில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஜனாதிபதி எப்படித் தீர்க்கப்போகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

அரசில் அங்கத்துவம் வகித்துக்கொண்டு கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் செயற்பட்டனர் எனக் கூறி விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவரும் ஜனாதிபதியால் ப்தவி நீக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. இந்த அரசை அரசுக்குள் இருப்பவர்களே வெறுக்கத் தொடங்கியுள்ளனர். அதன் வெளிப்பாடாகவே விமல், கம்மன்பிலவின் அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளன.

எனவே, அரசுக்குள் ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)




# சுழிபுரம்-பறாளாய் ஈசுர விநாயகரின் சமாதான அரணின் குரல்

# ‘மனித சக்தியை ஆட்டிப் படைப்பது தெய்வீக சக்தி’

## ரஷ்யா-உக்ரைன் போர்

யுத்தத்தை உடன் நிறுத்துக! உலக மகா யுத்தம் வேண்டாம்! வேண்டாம் அனைத்து என் அன்பு உள்ளங்களே!

உலக மனித குலம் கொவிட் 19 என்னும் கண்ணுக்குப் புலப்படாத கொடிய வைரஸ் தொற்றினால் ஏறக்குறைய 50 இலட்சத்துக்கும் மேலாக மக்களை இழந்து தவிக்கின்ற இந் நேரத்திலே உலக மகா யுத்தம் ஒன்று தென்படுவது மிகவும் வேதனை அளிக்கின்றது. இது உலக மக்களுக்கு மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதைப் போன்றதாகும். எனவே அனைத்து உலக மக்களும் வெள்ளம் வரமுன் அணை கட்ட முன்வர வேண்டும்.

எவ்வுயிரையும் அழிக்கும் உரிமை எந்த ஒரு மனிதனுக்கும் கிடையாது கடந்த கால உலக மகாயுத்தங்களால் ஏற்பட்ட அழிவுகள் கொடுமைகள் பற்றி கேட்டுள்ளோம், அறிந்துள்ளோம், விளங்கியுள்ளோம். அது போன்றே நம் நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட கொடுமைகளின் விபரீதமான விளைவுகளை அனைத்து மக்களும் தற்போது ஒவ்வொன்றாக அனுபவித்துக் கொண்டு வாழாமல் வாழ்ந்து கொண்டு வருகின்றோம்.

எனவே மனித உயிர்களைப் பாதுகாக்கவும் மனித அவலங்கள் ஏற்படாமல் இவ்வுலகம் இன்புற்றிருக்க வேண்டுமானால் மனித உயிர்களைப் படைத்த இறைவன் காட்டும் ஆன்மீக வழியையே நாம் கைக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே சுழிபுரம் பறாளை சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகர் காட்டியருளிய ஆன்மீக வழியாக அடியேனுக்குத் தென்படுகின்ற ஆன்மீக நிறைமகான்கள் வாழ்ந்து காட்டிய புண்ணிய பூமியாகிய பாரத நாடே இந்தப் போரில் தலையிட்டு உடன் யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க ஆவண செய்ய வேண்டும். நடுநிலை என்று கூறி யுத்தத்தினால் ஏற்படுகிற மனித அவலங்களை இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது பாரத நாட்டின் வலிமையும் புகழையும் சர்வதேசம் எங்கும் பரப்புவதற்கு இந்திய அரசு முன்வர வேண்டுகின்றோம்.

இது காரணமாக இன்றைய சதுர்த்தி நன்நாளில் (06.03.2022) இன்று பி.ப 03.30 மணியளவில் எம்பெருமானுக்கு விஷேட அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் வீதி உலாவும் நடைபெறும்.

இரவு 7.00 மணியளவில்: ரஷ்யா-உக்ரைனின் யுத்தத்தில் இந்திய அரசு தலையிட வேண்டியும் உடன் யுத்த நிறுத்தம் ஏற்படவும் இறையருள் வேண்டி 108 விடிவிளக்குகள் எம்பெருமானுக்கு ஏற்றி வைக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

எழுதிடும் எழுத்திலெல்லாம் கலந்தவன் கடவுளம்மா
லோகா சமஸ்தா சுகினோ் பவன்து.

சோழியூரான் - பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும்)

(10487)


# இராசிபலன்

06.03.2022
மாசி 22, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 11.35 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 5.58 மணிவரை
சுபநேரம் - 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் -4.55-6.25 மணிவரை

சதுர்த்தி விரதம்,
சந்திராஷ்டமம்-உத்தரம்

வளவன்




ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, உடல்நலனில் கவனம் தேவை.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையம் உயரும் நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக்குழப்பம் அகலும்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், பிறருக்கு உதவும் எண்ணம் [illegible]வாகும்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.




எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் பழகும் முறை அவர் உள்ளத்தை திறந்து காட்டும் கண்ணாடி

# யாழ்ப்பாணம் அரியாலை ஊரி
# இராதாதேவி சபாபதி அவர்களி



திருமதி.பவானி ஆலாலசுந்தரம்
இசைக் கலைமணி, இசைக்கலாவித்தகர்
சதாகான நிலைய அதிபர் (கனடா)
தமிழ் ஆசிரியர் (PEEL BOARD IN CANADA)

என் இசை வாழ்வுக்கு வழிகாட்டியவரும் எனது பெரும் மதிப்பிற்குரிய ஆசிரியை ராதாதேவி சபாபதி அவர்கள் பெரும் இசைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். தந்தை திரு.சபாபதி அண்ணாவியார், சகோதரர் சங்கீத பூஷணம் பாலசிங்கம் ஆசிரியர் அக்காலத்தில் சிறந்து விளங்கியவர்கள்.

இவர் இளமைக்காலத்திலேயே இசை ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கியவர். அவரின் முதல் மாணவர்களாக பவானி ஆலாலசுந்தரம் ஆகிய நானும் கிருஷ்ணவேணி மயில் வாகனமும் என்று கூறுவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன். இராதா அக்கா மிகவும் கண்டிப்பான இசை ஆசிரியை. தனது இல்லத்தையே கலைக்கூடமாக்கி காலையில் இருந்து மாலை வரையும் ஓய்வின்றி தன் குரல் வளத்தைப் பாராது மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

மாணவர்களை பரீட்சைக்குத் தயார் செய்வதிலும் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்வதிலும் நேரகாலம் பாராது அயராது உழைத்தார். தன் வாழ்க்கையினை இசைக்கு அர்ப்பணித்து மனம் சலிப்படையாது, அயராது உழைத்து ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் பாடுபட்டதன் பலன் இராதாதேவி சபாபதி மிகவும் சிறந்த இசை ஆசிரியை என்று அனைவராலும் பாராட்டப்படுகிறார். அவருடைய மாணவியான எனக்கு கிடைக்கும் பாராட்டுக்கள் அனைத்தும் என் குருவுக்கே சமர்ப்பணம்.

இசையோடு பண்பாட்டையும் கற்றுக் கொடுத்தவர் இராதா அக்கா. எனது தந்தை மறைந்த ஆசிரியர் சதாசிவம் திரு.பாலசிங்கம் அவர்களோடு இசை ஆசிரியை இராதா அக்காவோடும் அளவு கடந்த அன்பை வைத்திருந்தார். இராதா அக்கா கற்பித்த பாடல்கள், வர்ணங்களை இன்றுவரை நான் எனது மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றேன். இசையினைக் கற்பித்தல் இலகுவான காரியமன்று மேலும் தன் குரல் நோவையும் பாராது தொண்டை அடைக்கும் வரை பாடியே கற்பிப்பார்.அதனை நான் இன்று உணர்கிறேன்.

வாழ்வை இசைக்கு அர்ப்பணித்த உங்களை இந்த உலகம் இசை உள்ளவரை பாராட்டும். உங்களைக் குருவாகப் பெற்ற நான் மிகப் பெரும் அதிர்ஷ்டசாலி. அரங்கேற்றம் கண்ட எனது மாணவர்களின் மலரில் உங்களின் ஆசியுரை அலங்கரித்துக் கொண்டே இருக்கும்.

மாதா, பிதா , குரு , தெய்வம் என்ற வகையில் உங்களை என்றும் எனது மனதில் வைத்துப் பூஜிக்கிறேன்.

**இப்படிக்கு,**
**உங்கள் மீது நிறைந்த அன்பு கொண்ட பழைய மாணவியும், முதல் மாணவியும்**
**ஸ்ரீமதி.பவானி ஆலாலசுந்தரம் சதாகான நிலையம் (அதிபர் கனடா)**



கலாவித்தகர்.செல்வி.இராதாதேவி சபாபதி
கர்நாடக இசை (25.11.1939) அவர்களால் கைப்பட எழுதிய நினைவுக் குறிப்பு

அரியாலை வில்வந்தெருவைப் பிறப்பிடமாகவும் தற்போது 23, குறோசெற் லேன், கச்சேரி நல்லூர் றோட் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றேன்.

நான் கலைக் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணாவி சபாபதியின் மகள். எனது பாட்டன்,தந்தை, சகோதரர்கள் கலைத்துறையில் பங்காற்றினர்.

ஆரம்பக்கல்வியை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும் மேற்படிப்பை கனக ரட்ணம் மகா வித்தியாலயத்திலும் கற்றேன். அங்கு படிக்கும் போதே வ.இ.ச.சபை பரீட்சையும் எடுத்தேன்.

அங்கு இசைத்துறையில் 13.03.1960 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தில் இசையாசிரியராக சேவை செய்கின்றேன்.நல்லூர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், அரியாலை சனசமூக நிலையம், அரியாலை விசுவநாதன் இசைக் கல்லூரி, பாஷையூர் கன்னியர்மடம் மற்றும் பல வீடுகளிலும், எனது வீட்டிலும் வகுப்பு நடத்தியுள்ளேன். இப்பொழுது வீட்டில் வருபவர்களுக்கு படிப்பிக்கின்றேன்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை- கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும் ஆசிரியையாக கடமையாற்றி னேன்.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், விசுவநாதன் இசைக் கல்லூரி, திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழாக்களிலும் , வீடு குடிபூரல் முதலியவற்றில் இசைக் கச்சேரி நடத்தியுள்ளேன்.

சனசமூக நிலையங்களில் பாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றி மாணவர்களையும் பயிற்றுவித்து வெற்றியீட்டி பரிசில் பெற உதவினேன்.

வானொலியில் 1982 வரை இசைக்கச்சேரி செய்துள்ளேன். பல மாணவர்களை போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறச் செய்துள்ளேன்.

1957 ஆம் ஆண்டு பாடசாலையில் சரஸ்வதி பூஜையன்று காலஞ்சென்ற நடன ஆசிரியர் திரு. ஏரம்பு சுப்பையா அவர்களின் கட்டளைக்கேற்ப எனது முதற் கச்சேரி இடம்பெற்றது.



திருமதி.கிருஷ்ணவேணி மயில்வாகனம்
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
(அழகியல்) யாழ்.வலயம்

எனது முதற்குரு செல்வி. இராதாதேவி சபாபதி அவர்களே! 10 வயதில் அவரிடம் இசை பயிலத் தொடங்கி 10 வருடங்கள் பயின்று சங்கீத ஆசிரியர் தராதரப் பத்திரமும் சங்கீத கலாவித்தகர் என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன். அவர் அன்புடன் இட்ட அத்திவாரம் தான் நான் சுத்தமான இசையைப் பாடுவதற்கும் இசைக் கச்சேரிகள் செய்வதற்கும் உதவின.

நல்லாசிரியர் எனும் தகைமையைப் பெற்றுக் கொண்ட இசை ஆசிரியர் செல்வி. இராதாதேவி சபாபதி அவர்கள் வானொலிப் பாடகராகத் திகழ்ந்தார். யா/ கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம், கிளிநொச்சி இராமநாதபுரம், ஊர்காவற்றுறை ம. வி., கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம், யாழ்/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புகழுடன் இசை ஆசிரியராகத் திகழ்ந்து ஓய்வு பெற்றார். 2011 ஆம் ஆண்டு யாழ். பிரதேச சபை இவரது இசைச்சேவையைப் பாராட்டி "யாழ் ரத்னா" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.

அவர்களுடைய மாணவர்களாகிய நாம் இன்று ஆசிரியரை பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றோம். இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையு[illegible] வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.



எம் ஆசானும்,ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர்
செல்வி.இராதாதேவி சபாபதி
அவர்களிற்கு வழங்கப்படும்
வாழ்த்துப் பாமாலை

நற்பேறுடைப் பெரியோர் சபாபதி
தம்பதிகள் பெற்றெடுத்த இராதாதேவி
பெயரும் நற்புகழும் பெற்று பாரினிலே
சிறப்புற்ற நாயகியே வாழ்க!

கல்வியிலே சங்
கண்ணை நிகர்
எண்ணரிய சா
மாநிலத்தில் ப

மற்றவர்கள் ம
உற்றவராய் உ
பெற்றவரும் பு
வண்ணமுற இ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ல் பிறந்த இசை கலாவித்தகர்
# ின் சேவை நலன் பாராட்டு






குருவருள் இன்றேல் திருவருள் இல்லை

கலை இலக்கிய இசை போன்ற நிகழ்வில் புகழ் பூத்த இடமாக யாழ்ப்பாணத்திலுள்ள அரியாலைக்கிராமம் சிறப்புற்று விளங்கியது. 1970 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கை வானொலியில் குரல் வளத்தையும் கர்நாடக இசை வளத்தையும் வெளிப்படுத்திய பெருமை திரு.சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்களையே சாரும். இவருடைய தந்தையும் இசை விற்பன்னராக இருந்தவர்.அரியாலைக்குப் பெருமை சேர்த்த வித்தகருடைய சகோதரி தான் இராதா மிஸ் என அழைக்கப்படும் இராதாதேவி சபாபதிப்பிள்ளை அவர்கள். இவரும் கலாவித்தகர் தான். இவருடைய இசை வளத்தையும் பெருமையையும் இலங்கை வானொலியில் அக்காலப்பகுதியில் கேட்கக் கூடியதாக இருந்தது என நம் முன்னோர்கள் கூறுவார்கள். இராதா மிஸ்ஸின் புகழ் தான் என்னையும் எனது தம்பியையும் எனது தாயார் கலாமாலினி சிவானந்தம் அவரிடம் 1998 ஆம் ஆண்டளவில் சங்கீதம் கற்பதற்கு சேர்த்தார்.அவருடைய கற்பித்தலின் தன்மையால் அவரிடத்தில் பயபக்தி உருவாகியது. இவருடைய தன்மை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கற்பித்து பல மாணவர்களை உருவாக்கினார். எங்களை தன் பிள்ளைகளாகக் கருதி மிகுந்த சிரத்தையுடன் கற்பித்து, உற்சாகமும் அக்கறையும் கொண்டதனால் நாங்கள் நுண்கலைமாணி என்ற பட்டத்தையும் பெற்றோம்.

இவருடைய வாழ்வு என்றும் நிலைக்க இறைவனை வேண்டுகிறோம்.

**மாணவர்கள்–திருமதி.கோகுலன் தர்சா, திரு.சிவானந்தம் விபிசன்**


சேவை நலன்
பாராட்டுச் சான்றிதழ்

2011.. ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ். பிரதேச கலாசார விழாவில்

திரு/ திருமதி/ செல்வி ..இராதாதேவி..சபாபதி.........

அவர்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கும்,

கலைத்துறைக்கும் ஆற்றிய அரும் பணியைப் பாராட்டிக் கௌரவித்து

"யாழ் ரத்னா"

என்ற பட்டம் வழங்கப்பட்டது.

தலைவர்
யாழ். கலாசாரப் பேரவை
யாழ்ப்பாணம்.

**மலரமைப்பு- இசை பயின்ற மாணவர்கள்**

**ஸ்ரீமதி சிவரஞ்சினி ரமணா, இசை ஆசிரியர்,**
**யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்**
**மற்றும் கான லய நுண்கலைப் பயிலகம் , ஊரெழு**





குருவின் தாள் பணிந்து.

இசைக் கலாவித்தகர் இராதாதேவி சபாபதிப்பிள்ளை அவர்கள் ஸ்ருதி, லய, பாவம் மிகுந்த பெயர், புகழ் விரும்பாத ஓர் அற்புதமான தன்னடக்கம் கொண்ட இசைக் கலைஞர். இசையே வாழ்வாக எம்மை வாழ வழிசமைத்தவர் எமது குரு.அவரிடமிருந்து நாம் இசையோடு பண்பாடு,கலாசாரம், பழக்கவழக் கங்கள் எல்லாமே கற்றுக் கொண்டோம். எனது தாயாரான அமரர். ஸ்ரீரஞ்சனி அம்பாளும் இவரிடம் இசை பயின்றார் என்பதில் பெரிமிதம் கொள்கின்றேன். நான் சிறியவளாக அம்மாவின் மடியில் தவளும் காலங்களில் இருந்தே எனது தாயாரின் பைரவி, காம்போஜி, தோடி, நீலாம்பரி, ஸஹான போன்ற இராகங்களை கேட்டு வளர்ந்தேன். இப்போது நினைக்கின்றேன் எனது தாயார் இலாவகமாக இவ் ராகங்களையெல்லாம் பாடுவதற்கு ஆசிரியர் எவ்வாறு துணை புரிந்துள்ளார் என்பதனை. உண்மையில் இவர் ஒரு ஆத்மார்த்தமான ஆசிரியை.ஆசிரியையை நான் முதலில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்திலேயே கண்டேன். அன்றே அவரின் கற்பித்தல் வாண்மையால், என் மனதில் நீங்கா இடம் பிடித்துவிட்டார்.

மன்றத்திலே பல கலைஞர்கள் இசையை பயிற்றுவித்தார்கள். நான் காலை சென்றவுடன் முதலாவது பாடவேளை ஆசிரியருடையதே.சகல ஆரம்ப பாடங்களையும் படிப்படியாக எமக்கு பொறுமையுடன் கற்பித்து , நீண்ட நேரம் பயிற்சியில் ஈடுபடுத்துவார்.நாம் இவரது வகுப்பில் பல மணி நேரம் சளைக்காமல் உற்சாகத்துடன் பாடுவோம்.ஆசிரியர் சகல விடயங்களிலும் கண்டிப்பு மிகுந்தவர்.தடி எடுத்து ஒருபோதும் அடிக்கவில்லை."ஆ...." என்றாலே அவரின் தொனி எங்களுக்கு விடயத்தை உணர்த்தும். அந்தக் கண்டிப்புடன் கூடிய வழிப்படுத்தலே இன்று எம்மை இசையாளராக , நல்ல மனிதராக வாழ உதவியது. அன்பு , அடக்கம், பணிவு, கட்டுப்பாடு, தன்னம்பிக்கை , தற்துணிவு , ஆளுமை போன்ற பண்புகளோடு வாழ வழி வழிகாட்டிய ஆசிரியர் என்றால் மிகையாகாது. அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் இயங்காததன் பின் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று படித்து வந்தேன். சகல சபாகான உருப்படிகளையும் எமக்கு விளங்கும் வரை நுணுக்கமாகவும் பக்குவமாகவும் திரும்பத் திரும்பச் சொல்லித்தருவார்.அவர் வர்ணங்கள் கற்பிக்கும் பாங்கே தனி. பஞ்சரத்தின கிருதிகளை சகல சங்கதிகளுடனும் மிகவும் தெளிவாகக் கற்றுத் தந்தார். ஆசிரியர் இராகம், தானம், பல்லவி கற்பிக்கும் போது அவர் தானம் பாடுவதைப் பார்த்து பலமுறை நான் பிரமித்துப் போய் உள்ளேன். அவ்வாறு சிறப்பாகப் பாடுவார். பல்லவியைத் திரிகாலப்படுத்திச் சொல்லித் தருவார்.எமக்கு மிகவும் எளிதாக அவ் விடயம் மனதில் பதிந்துவிடும்.இதுவும் அவரது கற்பித்தல் நுட்பமே. இராமநாதன் நுண்கலைக் கழகம் சென்று நாம் இந்த உருப்படிகளைக் கற்குமுன்னே ஆசிரியர் எமக்கு ஒவ்வொரு வகையான உருப்படிகளையும் சொல்லித் தந்துள்ளார்.

சிறு வயதிலேயே இராகம், கீர்த்தனை ஸ்வரம் பாடி அவைக்காற்றுகை நிகழ்வுகள் செய்வித்து ஊக்கமளித்தார். தனியாகவும், குழுவாகவும் பாடுவதற்கு களம் அமைத்துத் தந்தார்.இவரது தமையனாரான சங்கீதபூஷணம் திரு. ச.பாலசிங்கம் அவர்களும் எமக்கு பல உருப்படிகளை அழகாகக் கற்றுத் தந்து எம்மை வாழ்வில் உயர்த்தினார்.அவரும் நாம் பாடுவதற்குப் பல களம் அமைத்துத் தந்தார்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இவரிடம் கற்றுள்ளனர். இவரிடம் கற்ற மாணவர்கள் இசையில் திறமையானவர்களாகவும், நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் [illegible]. இத்தகைய நற்பணிபுரிந்த ஆசிரியர் தனது வயோதிப காலத்தில் சிறந்த ஆரோக்கியத்து [illegible] இறைவனின் துணை வேண்டி நிற்கின்றேன்.

ங்கீதத் துறைதோய்ந்து
ர் மாணவர்க்கு ஊட்டி
தனைகள் புரிந்து
வனிவந்த நல்லவளே வாழ்க!

ணங்களில் குடியிருந்து
றவினராய் மனந்திறந்து
ரியாத பணி புரிந்து
இசை வளர்த்த தூயவளே வாழ்க!

சிந்தனைசொல் செயலிலென்றும் கண்ணாகி
பல ஆசிரியர்களை உருவாக்க சேவையாற்றிய
உம்மை இறைவனின் ஆசியுடன் ஆயுள் நீடு பெற்று
வாழ்ந்திட வாழ்த்துகின்றேன். வாழ்க! பல்லாண்டு வாழ்க!

**வாழ்த்துவோர்:**
**திருமதி. இரஞ்சினி அழகரத்தினம்,**
**(இசைக்கலைமணி கலாவித்தகர்**
**வாய்ப்பாட்டு, வயலின்)**
**யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை)**

(0491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்பாடற்ற நிலையில் 700 வீட்டுத்திட்ட வீடுகள்

## அங்கஜன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட 700 வீடுகளில் மக்கள் நிரந்தமாக குடியேறாத நிலைமை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 700 வீடுகளில் மக்கள் நிரந்தமாக குடியேறவில்லை. அதனால் அவர்கள் வீட்டு வளாகங்கள் பற்றை காடாக காட்சி அளிக்கின்றன. வீட்டு திட்ட வீடுகளில் குடியேறாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன் வீட்டு திட்டத்திற்கு வழங்கப்படும் நிதி போதாமையுள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

தென்னிலங்கையில் வீட்டுத் திட்டங்களுக்கு 6 இலட்ச ரூபாயே வழங்கப்படுகிறது. இங்கே 10 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது. தற்போதைய விலைவாசி அதிகரிப்பு இந்த நிதித்தொகை போதாது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அதனால் வீட்டுத் திட்ட நிதி தொகையையே அதிகரிக்க கோரவுள்ளோம் எனத் தெரிவித்தார். (4-6-33)

# முதலாவது வனவள கிராமமாக வடமராட்சி மணற்காடு பிரகடனம்

(சாவகச்சேரி)

**இலங்கையின் முதலாவது மக்கள் மயப்படுத்தப்பட்ட வனவள கிராமமாக வடமராட்சி-மணற்காடு பிரகடனப்படுத்தப்படும் என வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க உறுதியளித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளில் மக்களின் வாழ்வாதார தேவைக்குரிய காணிகளை விடுவிப்பது தொடர்பாக நேற்று சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே துறைசார் அமைச்சர் குறித்த உறுதிமொழியை வழங்கியிருந்தார். மக்களால் அமைக்கப்பட்ட மணற்காடு சவுக்கு மரக்காட்டினை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் அமைச்சரிடம் முன்வைத்த நிலையிலேயே அவர் அதனை ஏற்று மக்கள் மயப்படுத்தப்பட்ட வனவள கிராமமாக மணற்காட்டினை பிரகடனப்படுத்த உறுதியளித்திருந்தார்.

அத்துடன் பொதுமக்கள் அங்குள்ள சவுக்கு மரக்காடுகளை பாதுகாத்து வாழ்வாதர செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் மணல் அகழ்வு இடம்பெறா வண்ணம் காட்டினை பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6-30)

## யாழ்.வர்த்தக நிலையங்களில் வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தைச் சேர்ந்த வர்த்தக ஸ்தாபனங்களில் மற்றும் பொருட்கள் விநியோக நிறுவனங்களில் தற்போது பெருந் தொகையான வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

முகாமையாளர். உதவிமுகாமையாளர், காசாளர், கணக்காளர், கணக்குப்பதியுநர், அலுவலக உதவியாளர்கள், கணணித்தரவுப்பதியுநர், விற்பனையாளர்கள், விற்பனைப்பிரதிநிதிகள், சாரதிகள் போன்றவற்றிக்காக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

ஆகையால் இந்தத் துறைகளில் வேலை பெற விரும்பும் ஆண், பெண் இருபாலரும் இல.165 மானிப் பாய்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகத்திற்கு தங்களது சுய விபரக் கோவையினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ விண்ணப் பிக்க முடியும்.

அத்துடன் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் jaffnachamberofcommerce@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கமுடியும் என்று யாழ். வணிகர் கழக செயலாளர் ச.சிவலோகேசன் அறிவித்துள்ளார். (4)

## இந்திய மீனவர் அறுவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களையும் இம் மாதம் 18 ஆம் திகதி வரை சிறையில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெப்ரவரி 19 ஆம் திகதி அதிகாலை காரைநகர் கோவளம் கடற்பரப்பில் தமிழ்நாடு நாக பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் நாட்டுப்படகில் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதில் இருந்த 6 மீனவர்களையும் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களையே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-6-33)




இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் லக்ஸன் பியூஸ்லஸின் பூதவுடல் வடமராட்சி வல்வெட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அவரது சொந்த இடமான மன்னாருக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது.

(படம்: மகாலிங்கம்)

## நேர்முகத் தேர்வில் தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீதிப்பணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 15.07.2021 ஆம் திகதி மற்றும் 30.11.2021 ஆம் திகதிகளில் நடைபெற்ற நேர் முகத்தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நியமனத்திற்காக வடக்கு மாகாண ஆளுநரின் அமைதி பெறப்பட்ட உதவிப் பொதுமுகாமையாளர் நிதி மற்றும் நிர்வாகம் போக்குவரத்து உத்தியோகத்தர் முகாமைத்துவ உதவியாளர், பேருந்து நிலைய பொறுப்பதிகாரி மற்றும் திடீர் பரிசோதனை உத்தியோகத்தர்கள் விபரம் www. np.gov.lk எனும் வடக்கு மாகாண இணையத் தளத்தில் பார்வையிடலாம் என வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தலைவர் த.அமிர்தலிங்கம் தெரிவித்தார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 115 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 420 | 400 | 360 | 450 |
| தக்காளி | 250 | 240 | 240 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 250 | 350 | 380 | 400 |
| பூசணி | 140 | 140 | 140 | 140 |
| புடோல் | 250 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 100 | 100-300 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120-170 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 220 | 160 | 170 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 250 | 300 |
| லீக்ஸ் | 200 | 100 | 170 | 200 |
| பீற்றூட் | 160 | 150 | 220 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 1600 |
| போஞ்சி | 260 | 140 | 140 | 350 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 80 | 120 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 170 | 150 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 90 | 150 | 120 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | — | — | 80 | -- |

# தென்மராட்சியில் அடுத்த வாரம் தடுப்பூசி முகாம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் அடுத்த வாரம் தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தடுப்பூசி முகாம் அமைத்து கொரோனா தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் தடுப்பூசி செலுத்தாதோர் பொது இடங்களில் நடமாட முடியாது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலை அடுத்து சாவகச்சேரி சுகாதார பிரிவு கிராமம் தோறும் தடுப்பூசி முகாம் அமைத்து பொது மக்களுக்கு தடுப்பூசி செலுத்தவுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் இதுவரை 22சதவீத மானோர் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் டோஸினை பெற்றுள்ள நிலையில் ஏனைய பொதுமக்களும் கிராமம் தோறும் தடுப்பூசி என்ற செயற்திட்டம் ஊடாக கொரோனா தடுப்பூசியை முழு மையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சுகாதாரத் தரப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் இதுவரை 4கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை விதைத்தவன்; தினை அறுப்பான்.
வினை விதைத்தவன்; வினை அறுப்பான்.
– முதுமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற விதி தமிழர்களின் வாழ்வியல் தத்துவம்.

பாலர் பாடசாலைப் பருவத்திலேயே மாணவர்களுக்கு, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற நியதியைப் போதிக்கின்ற பண்பாட்டின் சொந்தக்காரர்கள் நாம் என்பதில் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

எனினும் சமகாலக் கல்வி முறையில் அறக் கருத்துக்கள் துடைத்து எறியப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையில், மேற்போந்த தத்துவம் எந்தளவுக்குப் பின்பற்றப்படுகிறதோ இல்லையோ தெரியவில்லை.

எனினும் குறித்த தத்துவம் இம்மியும் பிசகாமல் நிறைவேறி வருகிறதென்பது மட்டும் சத்தியமான உண்மை.

இந்த அடிப்படைத் தத்துவம் இலங்கை அரசியலில் நடந்தேறுவதை வெளிப்படையாகக் காண முடிகிறது.

ஆம், காணாமல்போனவர்களின் உறவுகள் விடுகின்ற கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படையாக எழுந்து நிற்கிறது.

எனினும் அது தொடர்பில் யாரும் சிந்திப்பதாக இல்லை. கடவுள் மீது – அறத்தின் மீது – பின்விளைவுகள் மீது நம்பிக்கையற்றவர்களின் கையில் நாடு சிக்கியுள்ளது.

அவர்கள் உண்மைகளையும் தத்துவங்களையும் போலியெனக் கருதி அதர்மத்தை, அட்டூழியத்தை, அநீதியை சிறந்த தீர்மானம் எனக் கருதிச் செயற்படுகின்றனர்.

இதன் காரணமாக நாடு அதலபாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது.

இஃது ஒருபுறம் நடந்தேற, ஈழத் தமிழ் இனத்துக்கு ஆட்சித் தரப்புச் செய்த அத்தனை கொடுமைகளையும் நியாயப்படுத்து வதன் மூலமாக, ஆட்சிப்பீடத்தினரை வாலாயப்படுத்தி அமைச்சுப்பதவிகளைப் பிடித்து வைத்திருந்த விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்றவர்கள் இப்போது அமைச்சுப் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த வாசுதேவ நாணயக்கார; அமைச்சுப் பதவிகளை நீக்கியமை அநீதியான செயல் எனக் கூறியுள்ளார்.

இங்குதான் வாசுதேவ நாணயக்கார நடுநிலையற்ற மனிதராக – பதவி ஆசை கொண்டவராகத் தன்னை முன்னிலைப்படுத்துகிறார்.

ஆம், ஆரம்பகாலங்களில் சமத்துவம், சமநீதி, சம உரிமை என்றெல்லாம் பேசிய வாசுதேவ நாணயக்கார தமிழ் மக்களின் உரிமை விடயத்திலும் நீதியின் பால் நின்று குரல் கொடுத்தார்.

ஆனால் அவரின் பின்னடிக்காலம் அவரை ஒரு கொள்கையற்றவராக – பதவிக்காகத் தன் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கக்கூடியவராக காட்டி நிற்கிறது.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டபோது வாய்மூடியிருந்து இன அழிப்பாளர்களுக்குத் துதி பாடிக் கொண்டிருந்த வாசுதேவ நாணயக்கார, இப்போது நீதி பற்றிக் கதைப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

பரவாயில்லை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற தத்துவம் வாசுதேவ நாணயக்காரவுக்கும் பொருந்தும் என்பதைக் காலத்தின் அசைவு நிச்சயம் நிரூபித்து நிற்கும்.

# இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினையை தீருங்கள்

## தமிழ்நாட்டு முதலமைச்சரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமாறும் கோரி யாழ். மாவட்டம் உட்பட ஏனைய நான்கு மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை கடிதம் அனுப்பவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு கடிதம் அனுப்புவது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு நோக்கி இரண்டு அரசாங்கங்களும் செயற்படவில்லை என்பது வடக்கு மீனவர்கள் மத்தியில் கவலையாக உள்ளது.

எனவே மீனவர்கள் போராடும்போதும் ஆர்ப்பாட்டம் செய்யும்போதும் பிரதேச செயலகங்களில் முற்றுகையிடும் போது மீனவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவமும் அத்தோடு இரண்டு அரசாங்கங்களும் தீர்வு பெற்றுத் தருவார்கள் என காத்திருந்த போதிலும் தீர்வு பெற்றுக் கொடுப்பது என்பது பேசுபொருளாக மாத்திரமே காணப்படுகின்றது.

எனவே இலங்கை கடற்தொழிலாளர்கள் ஒரு வேண்டுகோளினை, பத்திரிகை ஊடாக, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்ப இருக்கிறோம்.

குறித்த கடிதத்தின் மூலம் தமிழ்நாடு மற்றும் எமது வட இலங்கை மீனவர்களுக்கிடையிலான தொப்புள்கொடி உறவுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவண்ணம் இந்த கடிதம் ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-104)

# கடனை மீளச் செலுத்தும் வல்லமை இலங்கைக்கு இன்னும் உண்டு

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றுள்ள கடனை செலுத்துவதற்கான அனைத்து மாற்று வழிகளும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கைக்கு இன்னமும் கடன் செலுத்துவதற்கான வல்லமை காணப்படுவதாகவும் கூறினார்.

தமது தீர்மானங்களையும் கொள்கையையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஜனாதிபதிக்கும் நிதியமைச்சருக்கும் அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய வங்கி என்ற அடிப்படையில் அதன் நிலைப்பாட்டையும் நாட்டிற்குச் செய்ய வேண்டிய விடயங்களையும் அரசியல் பேதம் இன்றி தெளிவுபடுத்தியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பணிப்புரை வழங்குவது மத்திய வங்கியின் பொறுப்பாகும். மத்திய வங்கி என்ற அடிப்படையில் அரசாங்கத்திடம் முன்வைக்கும் யோசனைகளை கருத்திற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலானவை தொழில்நுட்பம் சார்ந்த கோரிக்கைகளாகும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்தார். (ம)

# நாட்டில் நேற்று மேலும் 639 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 639 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 649,632 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# இரத்ததான முகாம்


(குப்பிழான்)

யாழில் தற்போது நிலவும் இரத்தத் தேவையைக் கருத்திற்கொண்டு மல்லாகம் மக்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மல்லாகம் நீதி மன்ற வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கனிஷ்ட வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம-18)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## பொய்யால் இழக்கும் நன்மைகள்



பொய், ஏமாற்றுதல், உண்மைக்குப் புறம்பான நடத்தை போன்றவற்றால் கிடைக்கும் எதுவும் இறைவனின் ஆசிர்வாதத்திற்கு உட்பட்டதல்ல. நமது சம்பாத்தியத்தில் பொய் கலந்திருக்கின்றதா? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எவரிடமும் பொய் சொல்லக்கூடாது என்பதை வேதம் வலியுறுத்துகிறது. ஒரு கை தவறானதை நடப்பித்து விட்டு, அடுத்த கையிடம், நான் அப்பிடிச் செய்யவில்லை என்று பொய் கூறமுடியுமா? அந்த அளவுக்கு மற்றவர்களை நமது அங்கத்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டு அவர்களிடம் உண்மையை மட்டுமே பேச வேண்டும். (எபேசியர் 4:25).

தேவ சத்தியத்தை மறைப்பதும் பொய். மக்களை வேதம் கண்டிக்கும் காரியங்களைக் கூறினால் அவர்களுக்கு மனவருத்தம் ஏற்படும் என்று நினைத்து வேதபோதகர்கள் அதை கூறாமல் இருப்பதும், அதை மறைக்கும் நோக்கில் மாறாகப்பேசுவதும் பொய். (யாக். 3:14). போதிக்கும் போது இயேசு தரும் வார்த்தைகள் தவிர தனது சொந்த வார்த்தைகளை போதிக்கின்றவன் , பொய்யனின் பிள்ளை. (யோவான்8:44). இறைவனையே வஞ்சிக்கும்படி அனனியா– சப்பிராள் தம்பதிக்கு அவர்கள் வாயில் பொய்யை நிரப்பியது பொய்யின் பிதாவான சாத்தான் (அப்.5:3). பொய்யினால் அந்தத் தம்பதிகள் ஒருவர் பின் ஒருவராய் உயிர் இழந்தனர். பொய் பேசுகிறவர்களுக்கு சொர்க்கம் கிடையாது (வெளி 22:15) என்றெல்லாம் வேதம் எச்சரிக்கின்றது.

[illegible] செல்லும் பொய்யை விட்டொழிக்க நாடுவோம். உண்மையை மட்டுமே பேசுவதற்கு பலம் அளிக்க இயேசுவிடம் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடை, எரிபொருள் தட்டுப்பாடு
# அரிசி ஆலை உரிமையாளர்கள் பாதிப்பு

(நெளுக்குளம்)

**டீசல் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத்தடையால் வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.**

குறிப்பாக தற்போது பெரும் போக நெல் அறுவடைக்காலமாக இருப்பதால் வவுனியா உட்பட வன்னி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல் வவுனியாவில் அமைந்துள்ள அரிசி ஆலைகளால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதேவேளை நாட்டில் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், அதனால் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. இந்நிலையில் நெல்லினை பதப்படுத்தும் இயந்திரங்கள் செயலிழந்து போயுள்ளது.

இதனால் அறுவடை செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படும் நெல்மூடைகள் ஆலைகளில் தேங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்கும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தயக்கம்காட்டிவருகின்றனர். (4-6-299)

## நிர்வாகத் தெரிவு

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான கலாசார பேரவை பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்தின் குணநாயகம் மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்திற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்துள்ளார். (4-6-299)

## கடல் உணவுகளின் விலைகள் அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் உணவுகளின் விலைகள் மிக மோசமாக அதிகரித்து காணப்படுகின்றமையால் பொதுமக்கள் நுகர்வோர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

தற்போது நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக கடல் உணவுகளின் விலைகள் நேற்று சடுதியாக அதிகரித்த நிலையில் காணப்பட்டது.

கடல் உணவுகளின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (4-6-315)

## பனம் பொருள் உற்பத்தி நிலைய கட்டடம் திறந்து வைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பறண்நட்டகல் கிராமத்தில் பனம் பொருள் உற்பத்தி நிலைய கட்டடம் நேற்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

பராம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழில் கிராமங்கள் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 4.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழாக குறித்த கட்டடம் புனரமைக்கப்பட்டதுடன், கைப்பணியாளர்களிற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கபட்டவுள்ளது.



பனை அபிவிருத்தி சபையின் பறண்நட்டகல் சங்கத்தின் ஊடாக இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாஸன் மற்றும் அதிகாரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-299)

## யானைகளைக் கட்டுப்படுத்த வயல்களுக்கு அருகில் அகழிகள்

(அக்கராயன்)

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அகழிகள் அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 3 ஆம் திகதி கந்தபுரம் பொது நோக்கு மண்டபத்தில் அக்கராயன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எ.பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த கால போகத்தின் போது யானைகளினால் பெருமளவு நெற்பயிர்கள் அழிக்கப்பட்டன.

எனவே இனிவருங்காலங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வயல் நிலங்களுக்கு அருகில் அகழிகள் அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. (4-6-350)

## யாழில் உள்ள வெதுப்பகங்கள் மூட வேண்டிய நிலையில்

### வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாட்களில் கோதுமை மா விநியோகம் மட்டுப்படுத்தப்படுமாக இருந்தால் யாழ்.மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

யாழில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வடக்கிற்கான பிறிமா மா விநியோகஸ்தருடன் இன்றைய தினம் (நேற்று) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் யாழில் வெதுப்பக உற்பத்தி விநியோகத்திற்கான மாவின் அளவைக் குறைக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்கள் இதன் போது நாம் எமக்கு வழங்கப்படும் மாவின் அளவினை குறைக்க வேண்டாம் எனக் கோரியிருந்தோம்.

ஆனாலும், அவர்கள் எதிர்வரும் நாட்களில் யாழ் மாவட்டத்திற்கு வழங்கப்படுகின்ற மாவின் அளவினை உடனடியாக குறைக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக யாழ்.மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் உற்பத்தி அளவினைக் குறைக்கவுள்ளோம். யாழ்.மாவட்ட செயலர் மற்றும் கூட்டுறவு ஆணையாளரின் வழிகாட்டுதலின்படி நாம் செயற்படுகின்றோம். அவர்களுடன் கலந்துரையாடி எமக்கு வழங்கப்படும் மாவின் அளவைத் தொடர்ந்து பெற்றுத் தருமாறு கோரவுள்ளோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் மாவட்டச் செயலருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்திருக்கின்றோம். இதன்பின்னரும் மா வழங்கப்படாவிட்டால் வெதுப்பகங்கள் மூட வேண்டிய நிலைமை ஏற்படும்.

அத்துடன் எரிபொருள் பிரச்சினையும் தற்போது காணப்படுகின்றது.

எனவே, வெதுப்பகங்கள் தொடர்ச்சியாக இயங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர். (4-6-18-33-104)

## புதுக்குடியிருப்பு பூங்கா திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான சபை நிதியின் 10 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பூங்கா நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்த புதுக்குடியிருப்பில் பூங்கா ஒன்று இல்லாத குறையை நீக்கும் முகமாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டுக்கான சபை நிதியில் 10 மில்லியன் ரூபா செலவில் பாரிய பூங்கா அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் பூங்காவினுடைய பணிகள் நிறைவடைந்து பூங்காவினை உத்தி யோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (4-6-281)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை மாலை 3.00 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-6)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்தும் 13 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும்-16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 18 ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம் பெறும். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக்...

சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்டத்தில் வடமாகாண அணி சம்பியன் ஆகியது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய மாகாணங்களுக்கு இடையிலான சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் வடக்கு மாகாண அணியும் தெற்கு மாகாண அணியும் பலப்பரீட்சை நடாத்தியிருந்தனர்.

இதேவேளை, குறித்த போட்டியில் 03:01 என்ற கோல்களின் அடிப்படையில் வடக்கு மாகாண அணி மகுடம் சூடியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார். (ம-18,33)

## அதிகளவான...

கிழமை மாலை போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட அவர் அன்று இரவே உயிரிழந்தார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி ஒருவரிடமிருந்து போதை மாத்திரைகளை இருவர் வாங்கியுள்ளனர். தண்ணீரில் நனைந்த போதை மாத்திரைகள் பல ஒன்றோடு ஒன்று ஒட்டியவாறு காணப்பட்டுள்ளது. அவற்றை ஒரேயடியாக உயிரிழந்த இளைஞன் உட்கொண்டுள்ளார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. இரண்டு போதை மாத்திரைகளை உட்கொண்ட மற்றையவரிடமும் விசாரணையின் போது வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப் பட்டது. இது தொடர்பான மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-18,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1219
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 8 9 6 9 7 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1045
வெற்றி எழுத்து A சுப்பர் இலக்கம் 25 வெற்றி இலக்கங்கள் 01 26 51 77

மஹஜன சம்பத
திகதி 2022/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 4697
ஆங்கில எழுத்து D வெல்லப்படட இலக்கங்கள் 7 3 9 5 8 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.03.05
சீட்டிழுப்பு இலக்கம் - 727
P 43 55 61 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

## 14...

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16, 321 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## போதுமான...

நுகர்வோர் சாதாரண வரம்பை விட அதிகமாக எரிபொருள் நிரப்புவதும் கான்கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை பெற்று இருப்பு வைப்பதும்தான் இந்த எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணமாகும்.

எரிபொருளைக் கொண்ட கப்பல்கள் நாட்டிற்கு வந்துள்ளன, இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக விஜேசிங்க தெரிவித்தார். எனவே, நுகர்வோர்கள் பீதியடைய வேண்டாம் எனவும் வரிசையில் நிற்பதைத் தவிர்த்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறும் பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

## எரிபொருள்...

டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பொதுமக்கள் மின்சாரத்தை தொடர்ந்தும் சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரியுள்ளது. (ம)

## வலி. தென்...

ணைக்கு என அழைத்த பொலிஸார் தம் மீது தாக்குதல் நடத்தியதாக பிரதேசசபை உறுப்பினர் வழங்கிய தகவலையடுத்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர்.

"பிரதேசசபை உறுப்பினர் ஜிப்ரிகோவும்,அவரது சகோதரியும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். ஜிப்ரிகோவின் ஆடைகள் கிழிந்துள்ளன. அவர் நடக்க முடியாத நிலையில் காணப்பட்டார். அவரது சகோதரி மயக்கமடைந்து காணப்பட்டார். நோயாளர் காவுவண்டி மூலம் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறோம்" என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

இருவரும் தற்போது தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர், குறித்த அரசியல்வாதியின் ஆதரவாளர் என கூறப்படும் ஒருவர் பிரதேசசபை உறுப்பினர் ஜிப்ரிகோவின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அநாகரிகமாக நடந்ததாகவும், அவர் தாக்கப்பட்டதாகவும் செய்தி வெளியானது.

இந்த நிலையில், அத்துமீறி நுழைந்து தாக்குதலிற்குள்ளானதாக கூறப்படும் நபர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சென்றார்.

அவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பிரதேச சபை உறுப்பினரும், அவரது சகோதரியும் நேற்று இளவாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே தாக்குதல் இடம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம-33,104)

## ஜ.நா...

யில் 6 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியங்களை சேகரிக்கும் விடயத்தை கடுமையாக எதிர்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரமற்ற விடயங்களை உள்ளடக்கி 46/1 பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமையினால், அதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூட்டத்தொடரில் உரையாற்றியபோது தெரிவித்துள்ளார். (ம)

## அதிகாரம்...

கவும் பதவி நீக்குவதற்கும் அரச தலைவருக்கு அதிகாரம் உள்ளது. இதனை யாரும் கேள்வி கேட்க முடியாது. அரச தலைவர் வேண்டும் என்றால் என்னையும் பதவி நீக்க முடியும்.

அமைச்சரவையில் மாற்றத்தைக் கொண்டுவருவதினாலோ அல்லது அமைச்சர்களை மாற்றுவதினாலோ பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டமுடியாது. அமைச்சர்களை மாற்றுவது, நீக்குவது என்பது அரசியல் ரீதியான நடவடிக்கை.

புதிய கூட்டணி ஒன்றினை அமைப்பது தொடர்பில் எந்தவித தீர்மானமும் இல்லை. தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அரசில்...

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இருக்க தீர்மானித்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 4ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த பத்து கட்சிகளின் தலைவர்களும் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, விமல் வீரவன்ஸவின் கட்சியைச் சேர்ந்த 6 பேர், உதய கம்மன்பிலவின் கட்சி உறுப்பினர்கள் இருவர், வாசுதேவ நாணயக்காரவின் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர் மற்றும் அத்துரலிய ரத்ன தேரர், டிரன் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம். அதாவுல்லா உட்பட பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களாக செயற்படவுள்ளனர். (ம)

## பொறுப்...

உரிமைப்பேரவையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் தனது எழுத்து மூலமான அறிக்கையை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் இலங்கை தொடர்பான அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு உரையாற்றுகையில்,

இலங்கையில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படாத கலாசாரம் நீடித்துக் கொண்டிருக்கின்றது.

அதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் வன்முறைகள் இடம்பெறாத வகையில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் உணரக்கூடிய வகையிலான செயற்பாடுகள் இடம்பெறாத நிலைமை நீடித்துக்கொண்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச உபாய முறைகளை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவ அதிகாரிகளின் கைகளில் சிவில் நிர்வாகப் பதவிகள் குவிந்து கிடப்பது கண்டு நான் ஆழ்ந்த கவலையுடன் இருக்கின்றேன்.

அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்றார். (ம)

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1500
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரு. 5,718,000/-
வெற்றி இலக்கங்கள் 08 31 54 73 M

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.05
சீட்டிழுப்பு இல: 3838
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரு. 4,774,060/-
வெற்றி இலக்கங்கள் 33 34 42 48 J

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-03-05
வெற்றி வாரம் : 491 | வர்ணம் : சிவப்பு
ரு.14,146,436/-
I 61 56 47 4
ரு.2,554,160/-
ரு.14,268,908/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரு. 8,192,948/-
திகதி 05.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3386
வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் 04 13 23 43
7 3 6 9 7 1 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரு. 19,696,288/-

12 வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 12 24 43 45 63
சீட்டிழுப்பு வாரம் 850
வர்ணம் சிவப்பு
2022.03.05 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 218,877,223/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1674
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 05.03.2022
தினம் சனி
Y 02 04 62 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரு. 50,860,551/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதான போர் தற்காலிகமாக நிறுத்தம்

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான போர் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ரஷ்யா அறிவித்துள் ளது.

மக்கள் நலன் கருதி நேற்றுக் காலை முதல் உக்ரைனில் சிக்கியுள்ளவர்கள் வெளியேறுவதற்கு வசதியாக தற்காலிகமாக போர் நிறுத்தப் படுவதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைன் நாடு நேட்டோ அமைப்பில் சேர்ந்தால் அது தனக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற் படுத்தும்என்று கருதிய ரஷ்யா, கடந்த மாதம் இருபத்து நான்காம் திகதி அந்த நாட்டின் மீது யுத்தத்தை மேற்கொண்டி ருந்தது.

கடந்த பத்து நாட்களாக உக்ரைன் மீது சரமாரியாக ஏவுகணைகளையும், குண்டு களையும் வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தி வந்தது.

இதற்கு பல்வேறு நாடுகள் கடும் கண் டனம் தெரிவித்தும் ரஷ்யா தாக்குதலை தொடர் ந்து நடத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது. (நி)


## மணமகன் தேவை

யாழ். இந்து சைவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த மகம் நட்சத்திரம் 8 இல் செவ்வாய் குற்றமுள்ள உயர்கல்வி படித்த கனடா PR உள்ள மணமகளுக்கு தகுந்த வரனை (சைவ போசனம்) எதிர்பார்க்கின்றனர்.

**0097 155 742 0011**
**0097 156 576 3738**
nirna5219@gmail.com (10464)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

$A_1$ uk Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (10242)

OXFORD ENGLISH ACADMY, Ariyakulam junction, Jaffna
T.P: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசபாதையில் 3 பரப்பு உறுதிக்காணி 12 அடிப்பாதையுடன் இராசபாதையையும் பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் வண்ணம் அமைந்துள்ளது. வீடு கட்ட, தோட்டச் செய்கை என்பவற்றிக்கு உகந்த காணி விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தயவுசெய்து தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.) ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். காணி பார்ப்பதாயின் தொடர்பிலக்கத்திற்கு தொடர்பு கொண்டு வரவும். (10416)

காணி உரிமையாளர் : 076 096 0473

## மணமகன் தேவை

1979 இந்து கௌரவ குடும்பம், கார்த்திகை நட்சத்திரம், 74 கிரகபாவம், சூரியன் செவ்வாய் 1 இல் உடைய அரச உத்தியோக மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (C-3904)

**077 309 9689**
**077 330 1564**

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்த வியாபாரம் பழக ஆர்வமுள்ள ஆண்கள் தேவை. (ஞாயிறு திறந்திருக்கும்) (10506)

**சென்னை பசன் வேல்ட்**
63, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

## சாரதி மற்றும் பணியாளர் தேவை

கரடிபோக்குச் சந்தி கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பாரஊர்தி சாரதிகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஹாட்வெயார் அனுபவம் உள்ள பணியாளர் மற்றும் சீமெந்து விற்பனைப் பிரதிநிதி போன்றோர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**குரு ஹாட்வெயார்**
இல. 175, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி
T.P : 077 743 5265 (C-3899)

## வேலை வாய்ப்பு

இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தின் நெல்லியடி கிளையில் உடனடி வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (C-3896)

**077 263 1426**
**076 652 0662**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10451)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

**2022 A/L**
(2021 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)
நேரடி வகுப்பு - நிகழ்நிலை வகுப்பு

**DAY CLASSES** திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

**PHYSICS**
திரு.G.பிரபா திரு.S.சோதிலிங்கம்
11.30 - 1.30 Noon

**BIOLOGY**
திரு.V.S.குணசீலன் திரு.T.கெங்காதரன்
8.00 - 9.30 A.M

**CHEMISTRY**
திரு.S.T.உமாசங்கர் திரு.V.செல்வரஞ்சன்
9.30 - 11.30 A.M

**COM. MATHS**
திரு.P.செந்தில்நாதன்
7.00 A.M

ஆரம்பம்:- 07.03.2022 திங்கட்கிழமை
தொடர்பு:- 077 791 7611, 076 566 3006, 076 569 3006
https://Facebook.com/New Science Hall Jaffna (C-3898)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

0768226240 DHL

## DCM அக்கடமி

தொழிலதிபர், ஜெயகிருஸ்ணா வளாகம், சுன்னாகம்.

கணித, உயிரியல் Day Class
ஆரம்பம்:- 07.03.2022
காலை 8 மணி (10504)
**076 280 0538**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகருக்கும் தாவடிக்கும் இடையில் K.K.S வீதிக்கு அண்மையாக குடியிருப்பதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை. (C-3897)

**074 217 0383**

## வீடு வாடகைக்கு

யாழ். கச்சேரியடியில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
BED ROOM, HALL, KITCHEN, TOILET (10481)
தொடர்பு
**077 142 2846**

## விற்பனைக்கு

உயர்ந்த இன ஆடுகள் மற்றும் லயன் ஷெப்பட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
இடம் : கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம். (10493)

**074 039 9189**
**077 745 3835**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-3862)
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## LIVE IN CANADA

இலவச கருத்தரங்கு
கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்
06-03-2022 ஞாயிறு காலை - 11 மணி
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777 (C-3894)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாவட்டத்தில், யாழ்ப்பாணம் தொடங்கி தெல்லிப்பளை வரையிலான இடைப்பட்ட ஏதேனும் ஒரு பிரதேசத்தில் வயோதிபர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோருக்கு உடன் வீடு வாடகைக்கு தேவை. 3 அறைகள், attached bathroom மற்றும் கார் தரிப்பிடம் உள்ளடங்கலாக காணப்படல் வேண்டும். (10490)

**021 222 2440**
**077 808 4047**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வலம்புரியின் வாரமலர்
நாதம் 334

# சங்குநாதம்

Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2053 06.03.2022 தொலைபேசி : 021 222 3378

## என்று தணியும் இந்த வரிசை









## சுடுகாடாகும் உக்ரைன்





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இலங்கையின் உதைபந்தாட்ட தேசிய அணியின் பின்கள வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் அவர்கள் மாலைதீவில அகால மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

மன்னாரைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் உதைபந்தாட்ட தேசிய வீரராக இருந்து எங்கள் இனத்திற்குப் பெருமை சேர்த்தவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கனகசபை பாஸ்கரன் அவர்கள் விபத்துச் சம்பவமொன்றில் உயிரிழந்துள்ளார்.

எல்லோருடனும் அன்பாகவும் அடக்கமாகவும் பழகுகின்ற அவரின் திடீர் மறைவு கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**கங்காணி:** என்ன விதானையார் நாட்டு நிலைமை என்ன மாதிரியாகப் போகப் போகுது.

**விதானையார்:** என்னைப் பொறுத்தவரை அவரவர் செய்த பாவங்களுக்குத் தண்டனை கொடுக்கக் கடவுள் களத்தில இறங்கிற்றான். இனி அதில இருந்து எவரும் தப்ப முடியாது.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

மகிந்த தரப்பைத் தூக்கிப் பிடித்த விமல் வீரவன்சவுக்கும் உதய கம்மன்பிலவுக்கும் நடந்ததைப் பார்த்தியளோ. அதில இருந்து தெரியுது தானே கடவுள் எப்படியெல்லாம் அலுவல் பார்க்கிறான் எண்டு.

**மூப்பர்:** அதுசரி விதானையார்; விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களின்ர அமைச்சுப் பதவியை பறித்தால் அது கோட்டா தரப் பிற்குப் பின்னடைவாக அமையாதோ.

**சிறாப்பர்:** அதுதான்... அதுதான்... கெடுகாலம் ஏற்படக்க பகை தன் பாட்டில வந்து சேரும். சுசில் பிறேமஜயந்த, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களின்ர அமைச்சுப் பதவிகளை நீக்கினதால அவர்கள், நிச்சயம் ஒன்றுசேர்ந்து ஆட்சித் தரப்பிற்கு எதிராகச் செயற்படுவினம். அப்ப தானே கடவுள் நினைத்த காரியம் கை[illegible]

**சாத்திரியார்:** காலம் பிழைச்சால் கறுத்தார் என்ன செய்ய முடியும் என்கிற மாதிரித்தான் காலம் பிழைச்சால் ஜனாதிபதி கோட்டா தான் என்ன செய்யிறது. நிதியமைச்சர் பசில் தான் என்ன? பண்ணுறது.

இந்தாப் பாருங்க ஏதோ தன்ர அரசியல் பணியைச் செய்து கொண்டிருந்த அங்கஜன் இராமநாதனுக்கும் சோலி வந்திட்டுது.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** அண்மையில முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வந்தவரல்லோ

அவற்ற வருகையின் போது அங்கஜன் எம்.பி. முழுமூச்சில செயற்பட்டு மக்களைத் திரட்டி மிகப் பெரும் கூட்டத்தை வடமராட்சியில நடத்தினவர்.


மைத்திரிக்கு யாழ்ப்பாணத்தில இவ்வளவு செல்வாக்கு இருக்கோ எண்ட கேள்வியோட,

எல்லாம் அங்கஜன் எம்.பியின்ர ஏற்பாடு எண்டு அறிந்த கோட்டா தரப்பு அங்கஜனையும் முறைச்சுப் பார்க்குதெ[illegible]

**சிறாப்பர்:** அப[illegible] கதி அப்பிடியோ, அது தானே அங்கஜனின்ர பொறுப்புகளுக்கு இன்னும் சிலரை அரசாங்கம் நியமித்திருக்குது.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் அங்கஜன் இராமநாதன் தான் சார்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் விசுவாசமாக இருப்பதைப் பாராட்டத்தான் வேணும்.

கட்சிக்குக் கட்சி தாவுகிற இந்தக் காலத்தில அதுபற்றியெல்லாம் கவலைப்படாமல் அங்கஜன்



## சோதிடக் கணிப்பின்படி உலக யுத்தம் நடக்குமா?

நடந்திருக்கிறார்.

**சிறாப்பர்:** அதுசரி, சாத்திரியார் ரஷ்ய-உக்ரைன் போர் எங்க போய் முடியும்.

**சாத்திரியார்:** மகர ராசியில சனியும் செவ்வாயும் சேர்ந்திருக்கிறதால உலகில போர் நடக்கக் கூடிய நிலைமை இருக்கத்தான் செய்யுது.

அதைவிட எனக்குத் தெரிந்த சோதிடர் ஒருவர் சொல்லுறார் முதலாம் உலகப் போர் நடந்த ஆண்டு, மாதம், திகதியின்ர (28.07.1914) கூட்டுத் தொகையாக 05 உம். அதேபோல இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்த ஆண்டு, மாதம், திகதியின்ர (01.09.1939) கூட்டுத் தொகையும்05.

இப்ப உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திய ஆண்டு, மாதம், திகதியும் (24.02.2022) சேர்ந்தால் அதுவும் 05 ஆம். ஆகையால் உலக யுத்தம் நடக்கக் கூடிய சாத்தியம் இருக்குதெண்டு அவர் சொல்லுறார்.

**வாத்தியார்:** இஞ்சே சாத்திரியார் எல்லாத்தையும் சோதிடத்தோட ஒப்பிடக் கூடாது. நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் தான் மிகவும் முக்கியமானவை.

ஒரு பெரிய வல்லரசு நாடு ஒரு சிறிய நாட்டைத் தாக்கி அந்த மக்களைக் கொன்றொழிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

அந்த வகையில ரஷ்யாவின்ர போர் மூர்க்கம் உலகத்திற்கே அவலத்தைத் தந்து விடும் போல இருக்குது.

இவ்வாறு வாத்தியார் கூற, விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார். அதனை அவதானித்த மூப்பர் என்ன விதானையார் ஒரு மாதிரியா இருக்கிறியள் ஏதேனும் பிரச்சினையோ.

**விதானையார்:** என்ன பிரச்சினை? திருநெல்வேலி சந்தைப் பகுதியில போதைவஸ்து பாவனை எல்லை மீறி வருகுதாம். இதால திருநெல்வேலி வர்த்தகர்களும் மரக்கறி வர்த்தகர்களும் கதிகலங்கி நிற்கினம்.

அங்க மூடைக் கணக்கில பொருட்கள் களவு போகுதாம். இருந்தும் அதுபற்றிக்கதைக்க முடியாமல் இருக்குதெண்டு திருநெல்வேலி வர்த்தகர்கள் கவலைப்படுகினம்.

இது விடயத்தில கோப்பாய் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேணும். இவ்வாறு விதானையார் தெரிவிக்க, அதனை ஆலடி மாநாட்டின் தீர்மானமாக நிறைவேற்றுவம் என வாத்தியார் கூற, குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அதற்குத் தனது ஆதரவைத் தெரிவிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அரசியலுக்குப் பலியாகும் உக்ரைன்

ஒரு போர் என்ன செய்யும்? குண்டுச் சத்தம் கேட்ட அடுத்த நிமிடத்திலிருந்தே இயல்பு வாழ்க்கை குலைந்துவிடும். கடைகள் அடைக்கப்பட்டு உணவுகள் கிடைக்காது. ஏ.டி.எம் இயந்திரங்கள் பணம் தராது. மின்சாரம் தடைப்படும். போக்குவரத்து நின்றுவிடும். சாலைகள் துண்டிக்கப்படும். வாசலைத் தாண்டி வெளியில் செல்வதே உயிருக்கு ஆபத்தான விடயமாகிவிடும். நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்ல முடியாது. கர்ப்பிணிகளுக்கு பிரசவம் இனிய அனுபவமாக நிச்சயம் இருக்காது. நேற்று வரை தன் வீட்டில் நிம்மதியாக வாழ்ந்த ஒருவரை, நிர்க்கதியான அகதியாக்கி அண்டை தேசத்தின் வீதியில் நிறுத்திவிடும். ஒரு தேசத்தை, அதன் கட்டமைப்புகளைச் சிதைக்கும். மறுநிர்மாணம் செய்ய பல தலைமுறைகள் ஆகிவிடும்.

ஆனாலும் ஆட்சியாளர்களுக்குப் போர் சலிப்பதில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக மோசமாக உலகம் அணி பிரிந்து நிற்கும் போராக ரஷ்ய-உக்ரைன் போர் இருக்கிறது. பெப்ரவரி 24 அதிகாலை இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், நாங்கள் உக்ரைன் ஆக்கிரமிக்க போர் தொடுக்கவில்லை. அந்த நாட்டை இராணுவமயத்திலிருந்து விடுவிக்கப்போகிறோம்" என்று ஒரு விநோதமான காரணமும் சொன்னார்.

போர் தொடங்கியபிறகு நிமிடத்துக்கு நிமிடம் உலகம் மாறிக்கொண்டிருப்பதை உணர முடிந்தது. கிட்டத்தட்ட கடந்த இரண்டு மாதங்களாகவே உக்ரைனைச் சுற்றி மூன்று எல்லைகளிலும் படைகளைக் குவித்து ஆயத்தமாகி வந்தது ரஷ்யா. உக்ரைனுக்கு ஆதரவாக அண்டை நாடுகளில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் படைகளைக் குவித்தன. ஆனால், போர் தொடங்கிய பிறகு அவர்களில் யாரும் உக்ரைனுக்கு ஆதரவாக வரவில்லை. உலகம் எங்களைக் கைவிட்டுவிட்டது என்று புலம்பினார் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி. 18 முதல் 60 வயது வரையுள்ள உகரேய்ன் ஆண்கள் அனைவரையும் போரில் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொண்டது உக்ரைன் அரசு. முதியவர்கள் எங்கும் போக மறுத்து வீடுகளுக்குள் முடங்க, குழந்தைகளையும் பெண்களையும் அண்டை தேசங்களுக்குப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டுப் போர்ப் பயிற்சி எடுக்கிறார்கள் உக்ரைன் ஆண்கள்.

இரண்டு உலகப்போர்களில் ஐரோப்பா உருக்குலைந்ததைப் பார்த்திருக்காத இன்றைய தலைமுறையினர், ஐரோப்பாவில் நிகழும் இந்தப் போரைக் கண்டு அதிர்ந்து நிற்கின்றனர். போர் என்பது ஏதோ ஆப்பிரிக்க மற்றும் அரபு நாடுகளில் நாகரிகமற்ற மனிதர்கள் நிகழ்த்துவது என்பது அவர்களின் புரிதல். வெள்ளைத் தோலும் நீலக்கண்களும் கொண்ட சக ஐரோப்பியர்கள் அகதிகளாக வெளியேறுவது துயர் தருகிறது என்று புலம்புகிறார்கள். ஆபிரிக்க மற்றும் ஆசிய அகதிகளை ஏற்க மறுத்த ஐரோப்பிய நாடுகளுக்கு உக்ரைன் அகதிகளை ஏற்பதில் எந்தத் தயக்கமும் இல்லை. போலந்து நாட்டில்மட்டுமே பல இலட்சம் அகதிகள் குவிந்திருக்கிறார்கள். எப்போதும் இல்லாத நடைமுறையாக போப் பிரான்சிஸ் நேரடியாக ரஷ்யத் தூதரகத்துக்குப் போய் தன் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார். போர் என்றாலே அது அநீதியானது என்றாலும், ஐரோப்பாவில் போர் நிகழ்ந்தால் உலகம் சற்று அதிகமாகவே கவலைப்படுகிறது.

> “ பல நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகளே ரஷ்யாவைப் பேச்சுவார்த்தை மேசையை நோக்கி நகர்த்தியிருக்கின்றன. போரையும் நடத்திக்கொண்டு பேச்சுவார்த்தையும் நடத்தும் ரஷ்யாவின் வித்தியாசமான அணுகுமுறையை உலகம் பார்க்கிறது. ”





இந்தப் போருக்குத் தன்னிடம் நியாயமான காரணங்கள் இருப்பதாகக் கருதுகிறது ரஷ்யா. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் என்ற கூட்டமைப்பை உருவாக்கியது. நேட்டோ எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இதில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற 12 நாடுகள் இணைந்தன. நேட்டோ கூட்டமைப்பில் இருக்கும் எந்த ஒரு நாட்டின் மீது அந்நியப் படையெடுப்பு நிகழ்ந்தாலும், மற்ற நாடுகள் படைகளை அனுப்பி உதவி செய்யும். பெர்லின் சுவர் விழுந்து ஜெர்மனி ஒரே நாடாக மாறிய நேரத்தில், கிழக்கு ஐரோப்பாவில் இருக்கும் எந்த நாட்டையும் நேட்டோவில் சேர்க்க மாட்டோம் என்று அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி கோர்பசேவிடம் வாக்குறுதி கொடுத்தது அமெரிக்கா.

1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து சிதறியது. ரஷ்யா தனி நாடாகிவிட, இன்னும் 14 ப்குதிகள் தனித்தனி நாடுகள் ஆகின. உக்ரைனும் அதில் ஒன்று. ரஷ்யாவுக்கு ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியை மீறி இதில் பல நாடுகளை நேட்டோவில் சேர்த்தது அமெரிக்கா. ரஷ்யாவிலிருந்து பிரிந்த அண்டை நாடுகளான எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவை நேட்டோவில் இணைந்தன. போதாக்குறைக்கு உக்ரேய்னும் ஜோர்ஜியாவும் நேட்டோவில் சேர விரும்பின. இதனால், ரஷ்யாவைச் சுற்றி இருக்கும் எல்லா நாடுகளிலும் அமெரிக்கா தடம் பதித்தது போல ஆகிவிடும். இதை ரஷ்யா ரசிக்காததே பிரச்சினைக்குக்காரணம்.

சோவியத் யூனியன் உடைந்த பிறகும்கூட, அந்த நாடுகள் ரஷ்யாவுடன் கொமன்வெல்த் அமைப்பு ஒன்றில் இணைந்திருந்தன. நேட்டோ தூண்டிலைப் போட்டு அமெரிக்கா இங்கே மீன் பிடிக்க ஆரம்பித்தபிறகு அந்தக் கூட்டமைப்பு செயலிழந்துபோனது. தனிக்குடித்தனம் போகும் மருமகள்களுக்குப் புகுந்த வீடு பிடிக்காது அல்லவா? அந்த நிலையில்தான் ரஷ்யாவை இந்த நாடுகள் பலவும் அணுகின.

உக்ரைன் விடயத்தில் ரஷ்யாவுக்குக் கூடுதல் அக்கறை உண்டு. ரஷ்யாவுக்கு மிக நீண்ட கடல் பரப்பு இருந்தாலும், ஆண்டின் பல மாதங்கள் அவை பனியில் உறைந்தே இருக்கும். ஆகவே, போக்குவரத்துக்குக் கருங்கடல் பகுதியை நம்பியிருக்கிறது. கருங்கடலில் இருக்கும் உக்ரைன் நாட்டின் செவஸ்டபுல் துறைமுகத்தை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்திருந்தது ரஷ்யா. ஐரோப்பிய நாடுகளுடனும் ஆசியாவுடனும் வர்த்தகம் செய்ய அந்தத் துறைமுகம் ரஷ்யாவுக்கு அவசியம். அதனாலேயே தனக்கு இணக்கமான அரசு அங்கு இருப்பதை ரஷ்யா விரும்பியது. ஆனால், உக்ரைன் ஐரோப்பிய யூனியனிலும் நேட்டோவிலும் சேர முயன்றது. அப்படி நிகழ்ந்தால், செவஸ்டபுல் துறைமுகம் கைநழுவிப் போகும் என்பதை உணர்ந்த புடின், 2014 ஆம் ஆண்டு உக்ரைனைத் தாக்கி, கிரீமியா தீபகற்பத்தை ரஷ்யாவுடன் இணைத்துக்கொண்டார். இந்த கிரீமியாவில்தான் செவஸ்டபுல் துறைமுகம் இருக்கிறது.

இதைத் தொடர்ந்து உக்ரைன் தனது பாதுகாப்புக்காக 2019 இல் பிரிட்டனுடன் ஒப்பந்தம் போட்டது. உக்ரைனை ஒட்டிய கருங்கடல் பகுதியில் இரண்டு கடற்படைத் துறைமுகங்களை பிரிட்டன் உருவாக்கித் தருவதாக ஒப்பந்தம். இப்போது கருங்கடலில் பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. இந்த எல்லாவற்றையும் ரஷ்யாவுக்கான ஆபத்தாக புடின் பார்த்தார். அதுவே போரில் வந்து முடிந்திருக்கிறது. இந்தப் போரின் மூலம் கருங்கடல் பிரதேசத்தில் தன் ஆதிக்கத்தையும் கிழக்கு உக்ரைனில் ரஷ்யப் படைகளையும் வலுவாக நிறுத்த முயல்கிறார் புடின்.

ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவைச் சார்ந்தே ஐரோப்பா இருக்கிறது. அதையும் தாண்டி, பல நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகளே ரஷ்யாவைப் பேச்சு வார்த்தை மேசையை நோக்கி நகர்த்தியிருக்கின்றன. உக்ரைனுக்குக் குவியும் உதவிகளும் புடினை யோசிக்க வைத்திருக்கலாம். போரையும் நடத்திக்கொண்டு பேச்சுவார்த்தையும் நடத்தும் ரஷ்யாவின் வித்தியாசமான அணுகுமுறையை உலகம் பார்க்கிறது. கொரோனாவுக்குப் பிந்தைய பொருளாதாரச் சூழல் ஒரு போரைத் தாங்கும் நிலையில் இல்லை. அமைதி திரும்ப வேண்டும்.

ரஷ்யா சண்டையிடுவதை நிறுத்தினால், போர் இல்லாமல் போகும் உக்ரைன் சண்டையிடுவதை நிறுத்தினால், உக்ரைன் இல்லாமல் போகும் என்பதுதான் இப்போதைய நிலை.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வாழத் தெரிந்த எதிரிகள்

(நேற்றைய தொடர்ச்சி)

நாம் மாதவசேனன் மீது படையெடுத்துப் போன சமயத்தில் அவன் படையெடுத்து வந்து நம் நாட்டை கைப்பற்றி விடுவானே என்றார்.

அதற்கு அமைச்சர் "அரசே! இதற்கும் ஒரு வழி செய்திருக்கின்றேன். நம் விதூஷகன் இருவருக்குப் பயிற்சி அளித்து ஒருவனை மாதவசேனனிடமும் மற்றவனை சந்திரசேனனிடமும் அனுப்பி இருக்கிறேன்.

அவர்கள் சமயம் பார்த்து கோள்மூட்டி அந்த இரு மன்னர்களிடையேயும் பகைமை வளரும்படி செய்வார்கள். நீங்கள் மாதவசேனனை தோற்கடித்தால் சந்திரசேனன் மகிழ்ச்சியே அடைவான்" என்றார். மன்னர் அது கேட்டு அமைச்சரைப்



பாராட்டினார். அப்போது மயில்சாமி குறுக்கிட்டு "அரசே! தங்கள் விதூஷகர் மேதாவி போலத் தென்படுகிறார். அவரால் எங்கள் ஊர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நினைக்கிறேன்" என்றார். மன்னரும் உடனே விதூஷகனை வரவழைத்தார். விதூஷகனும் மயில்சாமியின் பிரச்சினையை விசாரித்து அறிந்து கொண்டு அது சரி, "வியாபாரியும் விவசாயியும் ஒருவரை மற்றவர் நம்பித்தானே இருக்க வேண்டும்? உங்கள் ஊரில் அவர்கள் எப்படி பகைமை கொண்டு இருக்க முடிகிறது?" என்று கேட்டான்.

அதற்கு மயில்சாமி "வைத்தியலிங்கம் தனக்கு வேண்டிய பொருட்களை மற்றவர்களை விட்டு வையாபுரியிடமிருந்து வாங்கிவரச் சொல்கிறார். வையாபரியும் அதுபோல வைத்தியலிங்கத்திடமிருந்து விளை பொருட்களை வாங்கிக் கொள்கிறார். இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் மறைமுகமாக அனுசரித்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் அவர்களிடையே பேச்சுவார்த்தை மட்டும் கிடையாது" என்றார்.

விதூஷகனும் "ஓகோ! இவர்கள் மகாபுத்திசாலிகள் போல் தெரிகிறது. இவர்களிடம் கோள் மூட்டுபவர்களை அனுப்பினால் சரியாகும்" என்றான். அப்போது மயில்சாமி மன்னரி டம் "அரசே! விதூஷ கரின் ஆட்கள் என் ஊருக்கு வந்து வெற்றி கரமாக விடயத்தை முடிக்கும் வரை தாங்கள் மாதவசேனனின் நாட்டின் மீதுபடை எடுத்துப் போக வேண்டாம் என்று வேண்டிக் கொள்கின்றேன் என்றார்.

அது கேட்டு மன்னர் ஆச்சரியப்பட்டார். ஆனால் அது ஏன் என்று மட்டும் அவரிடம் கேட்கவில்லை. விதூஷகனும் இருவரை கொடியூருக்கு அனுப்பினான். வையாபுரியின் வீட்டிற்கு சங்கரன் என்பவனும் வைத்தியலிங்கத்தின் வீட்டிற்கு கோபாலன் என்பவனும் சென்றனர்.


இருவரும் கோள் மூட்டுவதில் கைதேர்ந்தவர்கள். அந்த இருவரும் இல்லாததையும் பொல்லாததையும் வையாபுரியிடமும் வைத்தியலிங்கத்திடம் கோள் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

33



குலத்தொன்மை என்பது அக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. காலம், இடம், கருவி இம் மூன்றையும் நூல் வழியும் ஒற்றர் வழியும் ஆராய்ந்து, தெய்வ அருளையும் நம்பிச் செயலாற்றினர். அரசன் சினத்துக்கு அடங்கித் தாம் சொல்ல நினைப்பதைச் சொல்லாமல் இருக்க மாட்டார்கள்; அறவழிகளினின்று என்றும் பிழை செய்ய நினைக்கமாட்டார்கள்.

இடித்து உரைக்கும் துணைவர் இல்லாத ஆட்சி, வீழ்ச்சியுறும் என்பதை அறிந்தவராய்ப் படித்து உரைப்பர். உறுதிகளைக் கேளாத அரனதனக்கு இறுதிகளைத் தேடிக் கொள்வான். அதனால், அவனுக்கும் நாட்டுக்கும் விளையும் நன்மை, தீமைகளை ஆராய்ந்து நல்லது எது என்று முடிவு செய்யும் இயல்பினர். அவர்கள் மருத்துவர் போல் தக்க அறிவுரைகள் தரும் செருக்கினை உடையவர்; கசக்கும் என்பதால் அவன் இசையான் என்று நினைத்து அடங்கி இருக்க மாட்டார்கள். மனதில் பட்டதை மட்டும் கூறாமல் நன்கு ஆராய்ந்து காரண காரியங்களைக் காட்டித் தம் முடிவுகளுக்குச் சான்றுகள் தருவர். முன்னோர் காட்டிய வழி இது என்று அறிந்து, அதனால் ஏற்பட்ட ஆக்கமும் கேடும் கண்டு உரைப்பர்; பழம்பொருள் ஆராய்ச்சி செய்து அதனை நிலைநாட்டக் கருதாமல் வருபொருள் இது என்று முன்கூட்டி அறிவிப்பர். அரசுக்கு இவர்கள் தூண்களாக நின்று செயற்பட்டனர். புறத்தாக்கு எதுவும் நிகழவில்லை; அகமே நாக்கு எதுவும் அவன் அறிவிக்கவில்லை; கூட்டிய சூழ்நிலை ஏதும் அறியாத அவர்கள், அவன் வாய் திறந்து மொழிவதைக் கேட்க ஆவல் நிரம்பியவராய் அமர்ந்திருந்தனர். தசரதன் தன் மன நிலையை எடுத்து உரைத்தான்; அவர்கள் செவிமடுத்தனர்.

"சொல்வது புதுமை; அதனால், அது அதிர்ச்சியைத் தரலாம்; என்றாலும், அறிவு முதிர்ச்சி உடையவர் தக்கது என்று இதனை ஏற்றுக் கொள்வர். இதுவரை என் ஆட்சிக்கு உறு துணையாக இருந்தீர்; இனி என் தவமாட்சிக்குத் தடையாக நிற்க மாட்டீர் என்று நினைக்கிறேன்."

"என் மகன் இராமன் ஆட்சி ஏற்க, நீங்கள் தக்க துணைவர்களாக இருக்க வேண்டும்; வழி நடத்தித் தர வேண்டும்" என்றான்.

**அமைச்சர் தந்த மாற்றம்**

வாமனனாக வந்தவன் மூன்றடி மண் கேட்டான். இதை மாவலி எதிர்பார்க்கவில்லை; மாமன்னனாகிய தசரதன் மண் வேண்டாம் விண் வேண்டும் என்று புதிய வரத்தைக் கேட்கிறான். இது புதுமையாய் இருக்கிறது.

ஆட்சியின் சுகத்தை நுகர்ந்தவன் அவன்; அதை விட்டுக் கொடுக்கிறான் என்றால், அது புது யுகமாகத் தான் இருக்கும். நாட்டிலே மறுமலர்ச்சி உண்டாவது கேட்டு மகிழ்ச்சி அடைந்தனர். அதேசமயத்தில் அவர்கள் பழகி வந்த பழையோன், தன் கிழமையை விடுகிறான் என்றால் அவர்களால் வருந்தாமல் இருக்க முடியவில்லை; பாசம் அவர்களை இழுத்தது.

மூத்த கன்று விலகினால்தான் இளைய கன்றுக் குட்டிக்குத் தாய்பசு பால் தரமுடியும். அந்தத் தாய்ப் பசுவின் மனநிலையை அந்த அமைச்சர் பெற்றனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமா உலகில் பல தலைசிறந்த நடிகர்கள் இருந்தும் இன்று வரை மக்கள் மனங்களில் வாழும் மக்கள் திலகம் பற்றிக் கூறுங்கள்?

**தர்சி — யாழ்ப்பாணம்**

**கடவுள் நம்பிக்கை அற்றவர்களும் இறுதியில் கடவுளே! என்று கைகூப்புகின்றார்களே எப்படி?**

இப்படித்தான் ஒருமுறை நம்மாள் ஒருத்தன் கோவிலுக்குப் போய் கடவுளே எனக்கு நல்ல புத்தியைக்கொடு என விழுந்து விழுந்து கும்பிட்டான்.
அதைப்பார்த்த கடவுள் கூறினார்... இப்ப நல்லவன் மாதிரி சுத்திக் கும்பிட்டு தேங்காய் அடித்து தோப்புக்கரணம் போடுவாய்.
வெளியே போக உன் செருப்பைக் காணவில்லை என்றால் என்னைத்தானே திட்டுவாய் என.
உண்மையில் கடவுள் பாவம். ஏனென்றால் கெட்டவர்களும் போய் விழுந்து விழுந்து கும்பிடுகிறார்களே. அவரும் என்ன செய்ய?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**காமடிப்பீஸ் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா மாமா?**

தன் மனதில் எது படுகிறதோ அதை மற்றவர்களிடம் கேட்காமல் உடன் அமுலாக்குவது.
இதை புத்திசாலித்தனம் என தனக்குள்ளேயே எண்ணிக்கொள்வது.
இது ஆரம்பத்தில் சர்வாதிகாரச் செயற்பாடு போலத் தெரிந்தாலும் போகப்போக 23 ஆம் புலிகேசி வடிவேலு போலத்தான் தெரியும்.
புரிகிறதா தம்பி? புரிந்தவன் பிஸ்தா.

**சிவன் — வதிரி**

**எரிபொருளுக்கு வரிசையில் நின்று எரிபொருளை வாங்கி என்னத்தை செய்துவிட முடியும் மாமா?**

எரிபொருளுக்காக கால் கடுக்க காத்து நின்று எரிபொருளை வாங்கி வீட்டில தேக்கி வைக்கிற ஆட்கள் இருக்கும் வரைக்கும் தட்டுப்பாடு குறையவே குறையாது.
யாழ்ப்பாணம் பெற்றோல் செட்டில டீசலுக்கு வரிசையில் நிண்ட ஒராளைக் கண்டேன்.
என்னப்பா உன்னட்ட தான் ஒரு வாகனமும் இல்லை. பிறகேன் டீசல் வாங்கிறாய்? என்று கேட்டேன்.
அதுக்கு அந்தாள் சொல்லிச்சுது எல்லாம் ஒரு சேப்ரிக்குத்தான் எண்டு.
பாத்தியளோ? இப்ப புரியுதோ ஏன் எரிபொருளுக்கு தட்டுப்பாடு எண்டு.

**சிவா — யாழ்ப்பாணம்**

**குடுகுடுப்பை சாத்திரியாரிடம் எரிபொருள் இருக்கா? அல்லது இல்லையா? என்று சாத்திரம் கேட்டால்?**

தம்பி வீதியில வரிசையில நிக்கிற ஒவ்வொருவரிடமும் கேட்டுப்பார். அவர்கள் இருக்கா? இல்லையா? என்பதைக் கூறுவார்கள்.மக்கள் அவ்வளவு கடுப்பில் இருக்கிறார்கள். திட்டமிடல் எதுவும் இல்லாமல் செயற்பாட்டில் இறங்கினால் எப்படி இருக்கும் என்பதை உரம் உணர்த்தியது. இப்போது மீண்டும் எரிபொருள் வரிசை நிக்கின்றது. கடவுளே இதற்கு முடிவே இல்லையா.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**மதுவன் — மீசாலை**

**சினிமா உலகில் பல தலைசிறந்த நடிகர்கள் இருந்தும்இன்றுவரைமக்கள் மனங்களில் வாழும் மக்கள் திலகம் பற்றிக் கூறுங்கள்?**

எம்.ஜி.ஆர் என்ற அந்த மூன்று எழுத்துக்குள் இருக்கும் மந்திரம் சர்வசாதாரணமானது அல்ல .
சினிமாவில் காட்டிய தன்னை நிஜத்தில் நிரூபித்துக் காட்டிய ஒரே தலைவன் எம்.ஜி.ஆர் மட்டுமே.
ஏழைகளின் தோழனாய் திரைப்படத்தில் நடிப்பது ஒன்றும் பெரிய விசயமே அல்ல.
உண்மையில் ஏழைகளின் தோழனாய் வாழ்வதே முக்கியம். எம்.ஜி.ஆர் உண்மையாய் வாழ்ந்தார். அதனால்தான் மறைந்தும் மறையாமல் மக்கள் மனங்களில் வாழ்கின்றார்.

**சுரேஸ் — மன்னார்**

**நான் காதலிக்கும் பெண்ணை இன்னொருவன் காதலிக்கின்றான். நான் என்ன செய்ய? விட்டுக் கொடுப்பதா? அல்லது தட்டிப்பறிப்பதா?**

விட்டுக் கொடுப்பதற்கோ தட்டிப்பறிப்பதற்கோ காதல் ஒன்றும் மாங்காய் இல்லைத்தம்பி .
இப்படித்தான் பலர் தங்கள் வாழ்வை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கை என்ற அழகிய புத்தகத்தில் காதல் என்பது ஒரு பக்கம் மாத்திரமே.
அந்த ஒரு பக்கத்திற்காக வட்டுமொத்த வாழ்வு எனும் அழகிய புத்தகத்தை அழிப்பது நியாயம் இல்லை.



ரஷ்யா-உக்ரேய்னை தாக்குவதை நிறுத்துகின்றது இல்லையே? உலகநாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றதே?

**நந்து — வதிரி**

**ஜனாதிபதியை ஆட்சிக்குக் கொண்டு வர படாப்பாடுபட்டவர்களின் அமைச்சுப்பதவிகள் பறிக்கப்படுகின்றனவே?**

“ஆச்சியின்ர காதிலை கடிக்கேக்க தெரியாது அப்புவின்ர காதிலை கடிக்கேக்க தான் தெரியும்” என்டொரு ஊர்ப் பழமொழி உண்டு. இந்த ஆட்சியை கொண்டுவர இவை பட்டபாட்டை நினைக்க சிரிப்புத்தான் வருகுது காணும்.
கொஞ்ச நஞ்ச ஆட்டமா போட்டிச்சினம். அதிலும் விமல் வீரவன்சவின் ஆட்டத்தை மறக்க முடியுமா?
மொட்டை மலர வைக்க வடக்கில் புலி உருவாகி விட்டது என்று நாகூசாது கூறியவர்கள் இப்போது தங்களுக்குள் தாங்களே அடித்துக்கொள்கின்றார்கள். நாம் வெறும் பார்வையாளர்களே.

**சுதன் — குப்பிழான்**

**எங்களை அழித்த நாடுகள் அனைத்தும் தற்போது அழிந்து கொண்டிருக்கிறதே வியாசரே?**

அரசன் அண்டறுப்பான் தெய்வம் நின்டறுக்கும் என்பதெல்லாம் அந்தக்காலம்.
இப்போது தெய்வமே அன்டறுக்கின்றது.
நாதியற்ற தமிழினம் பட்டபாட்டை ஒரு நாளும் மறந்துவிடமாட்டோம்.
எம்மை அழித்தவர்கள் முதல், அழிக்க உதவியவர்கள் வரை அத்தனை பேரும் படும்பாட்டைப் பார்த்த பின்புதான் இந்தக் கட்டை (தமிழினம்) வேகும்.
இவற்றை நடத்திக்கொண்டிருக்கின்ற இறைவனுக்கு நன்றி.


**தாரா — மட்டுவில்**

**ரஷ்யா-உக்ரேய்னை தாக்குவதை நிறுத்துகின்றது இல்லையே? உலக நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றதே?**

இங்கு ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் இந்த உலகில் எத்தனை இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.
அப்போதெல்லாம் உலக நாடுகளுக்கு மனிதநேயம் பிறந்திருக்கும். இனி ஒரு போர் மேகம் சூழாது என்று நம்பி இருக்க இப்படி மனிதாபிமானமற்ற போரைத் தொடக்கி இருக்கின்றதே ரஷ்யா.
என்ன செய்ய பாவப்பட்ட இந்த உலகம் அழிவின் விளிம்பில் இருக்கின்றது என்பதே உண்மையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறையாவது வேண்டும்



ஊமை-என்
விழிகள் நோகுதையா!
வலிகள் பல கண்டு
மீண்டு வந்த எனை
கரங்களை கைப்பற்றி
அலறாத என் பலவீனம்
உமை எப்படி
வெல்லுமைய்யா!
பந்தம் இழந்த ஊமை
என்னில் - கண்ட
வேற்றுமை என்னவோ!
எரிக்கும் வெயிலில்
என் பாதம் கனக்கிறது
கல்லறையாவது
தருவீரோ! விரைவில்....

பா.சுதாகரன்,
புன்னாலைக்கட்டுவன்.

# உண்மை வழியில் வாழ்ந்து பார் உலகம் உனது கையில்



அழகிய பிறப்பு உனக்கு
அழகிய வாழ்வும் உனக்கே
உழைக்கும் கைகள் உனக்கு
உருவாக்கும் கை காலும் உனக்கே
இன்ப வாழ்வும் உனக்கு
சடில்லா செல்வமும் உனக்கே
உண்மை வழி உனக்கு
உயர்வான வாழ்வும் உனக்கே
உயர்ந்தால் உன் தரம்
பலரால் போற்றப்படுவாய்
பாதை தவறி
மனம் போன போக்கில்
நடப்பாயானால் பல இன்னலுக்கு
ஆளாகி துயரை சந்திக்க நேரிடும்
உண்மை வழியில் வாழ்வாயானால்
உலகம் உனது கையில்

எஸ்.கலாமணி,
மண்டைதீவு,

# என் மாணான் ஓர் நாள்

ஏதோவோர் சிந்தையில் மூழ்கியே போனான்
ஏது சிந்தை மெய் மொழியென்றேன்
வறுமை இவ்வுலகில் ஏதெல்லாம் உரையுமென்றான்

சான்று பகன்றிடவெண்ணி கூறினேன் சில வறுமை
அன்பனே! உணவிலா மாந்தருக்கு மட்டல்ல வறுமை

குழவியழும் வேளை இல்லி தூர்ந்த மென்முலைகள்
கணவன் உழைப்பினில் வறுமை போரிடுவேளை
துகிலுரியென்ற துரியோதன வார்த்தைகள்
அரசியலின் வறுமை கல்விகொண்டு களவிகண்ட
காளமேகம் தமிழிற்கு வறுமை

ஆடலால் ஆடவனைத்திட்ட
மாதவி கலைக்கு வறுமை
வரலாறு பிழைத்து மொழிந்த
கம்பன் நம்பகத்திற்கு வறுமை

பெண்ணவளங்கம் வருடிய இலக்குவன்
ஆண்மைக்கு வறுமை கைக்கிளை கொண்ட
ஆடவமகளிர் காதலின் வறுமை சட்டங்கள் கொண்ட
குற்றத்தின் காவல்கள் சமூகத்தின் வறுமை

இன்னும் எத்தனையோ வறுமைகள்
அதைக்கூற எமக்கும் நாழியில் வறுமை நாதனே!
வா புதுயுகம் படைக்க!

நவாலி,
பிரியன்.

# மௌனத்தின் தேடல்- 552



## சித்திரவதைகளுக்கு முடிவில்லையா?

சித்திரவதைப்படும் சிறுவர்களின்
துன்புறும் துயர் வாழ்வு நீங்கிட
சட்ட வலுவின் நீதியாதிக்கத்தினால்
கொரூர கொடிய குற்றங்களுக்கான
கடுமையான தண்டனை வலிமையாகலும்

தங்கத் தமிழன்,
காரைநகர்.

## சிரசு அற்ற முண்டங்கள்

சிரசு அற்ற முண்டங்களான
சிப்பாய்கள் நாங்கள் தான்
குந்தி அமர வைத்து வேட்டுகள்
தீர்த்து புதைகுழிகளில் புதைத்திடுவோம்
குழந்தை என்ன குமர் என்ன
பெண் என்ன ஆண் என்ன
கிழவன் என்ன கிழவி என்ன
தமிழர்கள் என்றால் விதம் விதமாய்
வதம் வதமே கதம் கதமே
எங்க சிங்க தேசத்திலே
வகை வகையாய் கொல்களங்கள்

கவிக்கோ, வவுனியூரான்.

## சிறுவனும் பயங்கரவாதியா?

பள்ளிப் படிப்பைத்தவிர வேறெதுவும்
தெரியாத அப்பாவிச் சிறுவனே!
நம் நாட்டில் அரச படையால் பின்புறம்
கைகள் கட்டித் தாக்கப்படும் உன்மீதும் இன்று
குத்தப்பட்டதோ பயங்கரவாத முத்திரை

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## யாருளா?

சிரசு அற்ற சிப்பாய்கள் நாங்களே
நாதியற்ற தமிழன் உள்ளவரை
குந்தி அமர வைத்து குழி தோண்டியே
புதைத்திடுவோம் நாமே
தட்டிக்கேட்க யார் உள்ளனர்
எங்கள் சிங்க தேசத்திலே

தமிழ்பித்தன்,
பண்டாரிகுளம்.

## அடிப்பிடி காட்டும் வஞ்சம்

குழாய் வழியே தாமே
குண்டுகள் பாய்ந்து கொல்லும்
அதன் அடிப்பிடி கூட
அதே வஞ்சத்தைக் காட்டுமாமோ
அயல் நாட்டுத் தலைவருக்கே
உயிர் ஆட்டம் காணிட வைப்பின்
குழந்தாய் நீ எந்த மாட்டு
நம்பிக்கையோடு இரு நல்லவை
நடக்கும் [illegible] வேண்டும்.

[illegible]வளவன்,
கொக்குவில்.

# மௌனத்தின் தேடல்- 553




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மரண பயம்

வலையில் பட்ட மான்போல
வளமாகச் சிக்கி
தலைபோகும் தருவாயில்
கண்கட்டி கைகட்டி
குந்தியிருக்கச் சொல்ல
என்ன செய்ய என்று
அவதிப்படுகின்றான்
மனதுள் இன்று...

ச.துஸ்யன்,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

## போர்க் காலம்

போர் மேகங்கள்
இருள் கவ்வும் வெட்டவெளி
எங்கும் இராணுவம்
துப்பாக்கி முனை
சித்திரைவதைக் கூடம்
எங்கும் மனித ஓலக்குரல்கள்
கழுகுகளின் கொண்டாட்டம்
மானிடம் செத்துக் கிடக்கிறது

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அன்று, கல்கிஸையிலிருந்த - சிங்களக் குடும்பங்கள் செறிவாக வாழுகிற கடற்கரைக் கிராமங்கள் உள்ள பிரதேசத்தில் அமைந்த அந்தச் சிறிய உணவகத்துக்கு வெளியே அமர்ந் திருந்தார்கள். இருவருக்கும் குளிர் பானம் சொல்லியிருந்தான் நீதன்.**

## வலி சொல்லும் தொடர். 23




முதன்முதலாகப் பார்த்தபோது, அவள் மென் மஞ்சள் நிறத்தில் கழுத்தைச் சுற்றி கறுப்பு வளையம் வைத்துத் தைத்த இறுக்கமான சட்டை அணிந்திருந்தாள். அங்க அடையாளமாக அவளது இடது புருவத்துக்கு மேல் சிறிய மச்ச மொன்று துருத்திக்கொண்டிருந் ததைச் சொல்லலாம்.

அன்று மதியம் வெள்ளவத்தை மல்லிகா வீதியிலுள்ள ஜாபர் வீட்டில் கொண்டுபோய் அவளைவிட்ட நீதன், இரண்டு வாரங்களுக்குப் பிறகு இரத்மலானையிலுள்ள இன்னொரு வீட்டுக்கு மாற்றினான். ராகவன் மாஸ்டர் கொடுத்தனுப்பியிருந்த தகவல்களின்படி, அடுத்தடுத்த நாட் களில் கொழும்பின் பிரதான பகுதி களுக்குத் தன்னுடன் அழைத்துச் சென்று, முக்கிய இடங்களைக் காண்பிக்கத் தொடங்கியிருந்தான் நீதன். சொல்லியனுப்பிய வேலை கள் தொடர்பாக கொஞ்சம் கொஞ் சமாக அவளுடன் பேசத் தொடங் கியிருந்தபோது அவள் தனது பெயர் ராதா என்று கூறியிருந்தாள்.

இயக்கப்பெட்டைகள் என்றாலே அவர்களின் மீது அள்ளிப்பூசிக் கிடக் கும் அந்த வீரமான நடையும், பயிற்சி பெற்ற மிடுக்கும் கொள்ளை அழகு. ஆனால், ராதா புலனாய்வுப் போராளி என்பதாலோ என்னவோ, இயல்பான இயக்கப்பெட்டைகளை விட வித்தியா சமானதோர் எழில் அவளில் அப்பிக் கிடந்தது. துறுதுறுத்த பார்வையை மறைத்துக்கொண்டு, தானொரு போராளி என்பதற்காக, செயற்கை யாகக் காண்பிக்கும் உடல் மொழி யாக இருக்கட்டும், பேசும் போது தன் னையறியாமல் 'ப்பச்க்' கொட்டிக் கொண்டு அவளிடம் வந்து விழும் சொற்களாக இருக்கட்டும், எதுவுமே அவளை ஒரு போராளி யென்ற வரை யறைக்குள் பொருத்திப் பார்ப்பதற்கு நீதனை அனுமதிக்கவில்லை.

அவள் வந்திருந்தது, நீதன் கொழும்பில் மிகத்தீவிரமாக இயங் கிக் கொண்டிருந்த காலப்பகுதி. விமான நிலையத் தாக்குதலொன் றுக்காக விசேட பயிற்சியளிக்கப்பட்டு, கொழும்புக்கு அனுப்பப்பட்ட போராளி களின் குழுவில், வன்னியிலிருந்து வந்த நீதன், தலைநகரில் மேலதிக மாகக் கொஞ்ச வேலைகளைத் திருப்தியாக செய்து முடித்ததால், ராகவன் மாஸ்டரின் நம்பிக்கைக்கு உரியவனாகி, கொழும்பிலேயே தங்கவைக்கபட்டிருந்தான்.

நீதனுக்குப் பொறுப்பாகவிருந்த கோடீஸ் ஒரு தடவை கொழும்பிலி ருந்து வன்னிக்குச்சென்றிருந்த போது, அவனைக் கிளைமோர் தின்றுவிட, அதற்குப் பிறகு, முற்று முழுதாகவே கொழும்பின் வேலைகளை நீதன் கவனிக்க வேண்டிய தாயிற்று.

பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட ஒரு சில நாட்களிலேயே, இராணு வத்தின் மிக முக்கியமான புலனாய் வுத் தளபதி ஒருவனை நீதனின் 'டீம்' பட்டப்பகலில் தலைநகரின் சனநட மாட்டம் மிகுந்த இடத்தில் வைத்து போட்டுத்தள்ளியது. தளபதியின் படம், கொழும்பின் சகல பத்திரிகைகளிலும் முன்பக்கத்தில் வந்திருந்தது.

அது கன காலத்துக்குப் பிறகு, கொழும்பில் இடம்பெற்ற 'முக்கி யஸ்தர் படுகொலை' என்பதால் தலைநகரே' தலைசுற்றிப் போயிருந் தது. "இவ்வளவு துணிச்சல் யாருக் கடா இங்கு வந்தது?" என்று படைப் புலனாய்வுத்துறையினர் தலையை நிமிர்ந்து பார்க்கும் முன்னரே, அடுத்தடுத்து வேறு சில முக்கியஸ் தர்களையும் கொழும்பின் புறநகர் பகுதியில் வைத்து போட்டுத்தள்ளியது நீதனின் டீம்.

தேடுதல் வேட்டை அது இது என்று பொலிஸாரின் கெடுபிடிகள் தொடங் கியிருந்த காலப்பகுதியிலேயே, புலிப்போராளிகளைத் தேடித் தேடி வேட்டையாடிக்கொண்டிருந்த இரா ணுவம்.

இப்படியாக நீதன் தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு காலப் பகுதியில், ராகவன் மாஸ்டர் ராதா வைக் கொழும்புக்கு அனுப்பி, ஒரு முக்கிய தற்கொலைத் தாக்கு தலை நடத்த உதவுமாறு உத்தர விட்டு, நீதனிடம் பொறுப்பை ஒப்படைத் திருந்தார்.

காரியத்தைக் கற்பூரம்போல கொளுத்தி முடித்துவிட வேண்டும் என்பதில் ராதா முனைப்பாக இருந் ததை நீதன் நன்றாக கவனித்தான்.

வன்னியில் கொடுத்து அனுப்பிய பயிற்சிக்கு மேலதிகமாக, வேலையை நேர்த்தியாக முடிக்க வேண்டும் என்ற கவனம் அவளிட மிருந்தது.

நீதனோடு வெளியில் சென்றுவரு கிறபோது, எல்லா விடயங்களையும் துரிதமாக உள்வாங்கிக்கொண்டாள் ராதா. தனக்குரித்தான கொஞ்ச நாட்களுக்குள் எவ்வளவுக்கு எவ் வளவு தனது வேலைக்குரிய ஆயத் தங்களை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அவளிடம் வேகமும் இருந்தது.

அன்று, கல்கிஸையிலிருந்த - சிங்க ளக் குடும்பங்கள் செறிவாக வாழுகிற கடற்கரைக் கிராமங்கள் உள்ள பிர தேசத்தில் அமைந்த அந்தச் சிறிய உணவகத்துக்கு வெளியே அமர்ந் திருந்தார்கள். இருவருக்கும் குளிர் பானம் சொல்லியிருந்தான் நீதன்.

புகையிரதக்கடவையோரத்தில் அமைந்த பிரம்பினால் வேயப்பட்ட குடை நிழல் அது. கடற்கரைக் காற் றும், இதமான வெயிலும் நிறைந்த அந்த இடம், அவ்வப் போது குடிகாரர் கொட்டகையாக அமைவதுமுண்டு. பொதுவில் ஆள் நடமாட்டம் இல லாத பிரதேசம்.

கடற்கரைக் காற்று ஒருபக்கத் தால் தலைவாரிக்கொண்டிருக்க, குளிர்பானத்தை இருவரும் மெது வாக உறிஞ்சிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது, அந்தக் காற்றைப் புயலாக மாற்றிவிட்டதைப்போல அப்பகுதியாகச் சென்ற பொலிஸ் வாகனமொன்று இவர்களைக் கண் டது.

கொழும்பு கல்கிஸ்ஸ பகுதியில் கடற்கரையோரமாக அமைந்த உணவகத்தில் அன்று ஆள் நட மாட்டம் குறைவாகயிருந்தது. பிரம்புப் பந்தலின் கீழ் இரண்டொரு பிளாஸ்றிக் மேசைகளின் மீது கதிரைகள் கவிழ்த்துவைக்கப்பட் டிருந்தன. நிமிர்ந்திருந்த கதிரை யொன்றில் நீதனும் மறுபக்கத்தில் ராதாவும் குளிர்பானத்துக்கான பரிசாரகனை எதிர்பார்த்துக் காத்தி ருந்தனர்.

அப்போது அந்த வீதியில் சென்ற பொலிஸ் வாகனமொன்று உண வகப் பக்கமாக நோட்டமிட்டது. வாகனம் தனது வேகத்தை சற்று மெதுவாக்கியது.

தாங்கள் ஜோடியாக அமர்ந்தி ருப்பதில் சந்தேகம்கொண்டு, பொலிஸ் வாகனம் திரும்பிவர ஆயத்தமாவதை நீதன் உறுதி யாகக் கண்டுவிட்டான். பொலிஸ் வாகனத்திலிருப்பவர்கள் இறங் கிவருவதற்கு அல்லது தங்களை யார் என்று அவர்கள் பார்ப்பதற்கு எடுத்துக்கொள்ளும் அவகாசத் துக்குள் சுதாரித்துக்கொள்ள வேண் டும் என்று, மெதுவாக எழுந்து சென்று ராதாவுக்கு அருகில் இருந்து கொண்டான். தனது இடுப்பிலிருந்த பிஸ்டலை தொட்டு உறுதிசெய்து கொண்டான். மெதுவாக ராதாவின் தோளின் மேலாகக் கையைப் போட்டுக்கொண்டு அவளின் கண் களைப் பார்த்தான்.

இருவரும் அமர்ந்திருக்கும் இடத்துக்கும் வீதிக்கும் இடையில் சுமார் ஐம்பது மீற்றர் தொலை வென்றாலும் எதுவும் செய்ய முடி யாத கையறுநிலைதான் அது.

ஓரளவுக்குக் கடற்கரை பக்க மாகவே பார்த்துக்கொண்டிருந்த ராதாவுக்கு, தனக்குப் பின்னால் நடைபெறுவது எதுவுமே தெரியா மலிருந்த கணத்தில், நீதன் அரு கில் வந்து அமர்ந்து தோளில் கைகளைப் போட்டுக்கொண்டதும் அதிர்ந்துபோனாள். பொலிஸ் வாக னம் கடற்கரைக்குச் சமாந்தரமாக வீதியோரம் நின்று சிக்னலைப் போட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## உருண்டது நான்கு, புரண்டது?




தாழ்த்திய கண்களை அந்தக் கண்களுடன் கலக்க முயன்ற கோட்டைத் தலைவனின் வஞ்சகக் கண்கள் தோல்வியடைந்தன. கண்களைத் தன் மடியை நோக்கி நன்றாகத் தாழ்த்திக் கொண்டான் இளையபல்லவன். ஏதோ உதாரணம் சொல்ல முயன்று நிறுத்திக்கொண்ட இளையபல்லவன் குரலிலிருந்த ஏளனமும் கோட்டைத் தலைவனைப் பெரிதும் திகைக்க வைத்தது. "ஏதோ சொல்ல முற்பட்டு நிறுத்திவிட்டீர்கள்" என்றான் கோட்டைத் தலைவன்.

"உதாரணம் சொல்ல முற்பட்டேன்." என்றான் இளையபல்லவன்.

"சொல்லுங்கள்." என்றான் கோட்டைத் தலைவன்.

திடீரென்று அந்த அறையே சுழல்வது போலிருந்தது கோட்டைத் தலைவனுக்கு. கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்துவிட்ட அந்தத் துணிகரச் செயல் எதற்கும் சலனப்படாத அவன் புத்தியைப் பெரிதும் குழப்பியதன்றி இணையற்ற பீதியையும் விளைவித்தது. அத்தனையும் ஏதோ ஜால வித்தைபோல் நிகழ்ந்தது. "சொல்லுங்கள்" என்று தன் வாயிலிருந்து வார்த்தை உதிரு முன்பாக இளைய பல்லவன் கச்சையில் இருந்த குறுவாள் இமை கொட்டு வதற்குள் தன்னை நோக்கிப் பறந்துவிட்டதையும், அப்படிப் பறந்த குறுவாள், தன் கழுத்தின் வலப்புறத்துக் கருகில் உராய்ந்து சருமத்தை இம்மியும் தொடாமல் கழுத்தை மறைத்த அங்கியை மட்டும் பிரித்து ஆசனத்தில் வைத்துத் தன் கழுத்தை அப்படியோ இப்படியோ அசையாமல் தடுத்து விட்டதையும் கண்டு, சிந்திக்கவும் சக்தியில்லாமல் பிரமை பிடித்து ஆசனத்தில் அப்படியே சாய்ந்து விட்டான் கோட்டைத் தலைவன்.

அறைக்குள் வகையாகத் தங்களிடம் சிக்கியிருப்பவன் தங்கள் தலைவன்மீது குறுவாளைத் திடீரென எடுத்து வீசுவானென்பதைச் சொப்பனத்திலும் எதிர் பார்க்காத வாள் பிடித்த வீரரும் கையிலிருந்த வாள்களை உபயோகிக்கவும் அஞ்சி சில விநாடிகள் அசைவற்று நின்றனர். முதல் கலவரம் நீங்கியதும் வாள்களை உருவப்போன அந்த வீரர்களை, கோட்டைத் தலைவனின் கரம் செய்த சமிக்ஞை தடுத்தது.

அந்தச் சமிக்ஞையைக் கண்ட இளையபல்லவன் கோட்டைத் தலைவனை நோக்கி, "தலைவரே! நீங்கள் தீரம் மிகுந்த அறிவாளிதான்." என்று பாராட்டினான்.

"எந்த விதத்தில் அறிவாளி?" தான் குறுவாளை வீசிக் கழுத்தை அசைய முடியாமல் ஆசனத்தில் புதைத்ததும் அடைந்த பிரமிப்பை வெகு சீக்கிரம் விலக்கிக் கொண்டு தனக்குக் கேள்வி போடத் துவங்கிய கோட்டைத் தலைவன் நிதானத்தைக் கண்டு பெரும் வியப்பெய்திய இளைய பல்லவன் மிகுந்த அபாயமான ஒரு மனிதனுடன் தான் உறவாட வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டானாகையால், "வாள்களை உபயோகப்படுத்த வேண்டாமென வீரார்களுக்குச் சமிக்ஞை செய்தது அறிவாளியின் செய்கை." என்றான் இளையபல்லவன் உணர்ச்சி ஏதும் காட்டாமலே.

"உங்களை அவர்கள் கொல்லாமல் தடுத்தது அறிவின் அத்தாட்சியா!" கோட்டைத் தலைவன் கேள்வியில் ஏளனமிருந்தது. "இல்லை, உங்களை நான் கொல்லாமல் தடுத்தது" என்றான் இளையபல்லவன்." புரியவில்லை எனக்கு.

"புரியச் சொல்கிறேன் கேளுங்கள், கோட்டைத் தலைவரே! என் கச்சையின் குறுவாள் மட்டுமல்ல, இதோ இடையில் தொங்கும் நீண்ட வாளும் வேகத்துடன் வினை விளைக்க வல்லது. இஷ்டப்பட்டிருந்தால் குறுவாளை உங்கள் கழுத்தின் நடுப்பகுதியை நோக்கி வீசி உங்கள் ஆயுளை நான் முடித்திருக்கலாம். என் உறுதியை உங்களுக்குக் காட்டவும் உங்கள் அந்தரங்க அறைகூட உங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை நிரூபிக்கவுமே குறுவாளை உங்கள் கழுத்தின் இடது பக்கத்துக்காக வீசி அங்கியை ஆசனத்தில் புதைத்தேன். உங்கள் வீரர்கள் வாள்களை ஓங்கியிருந்தால் கண்ணிமைக்கும் நேரத்தில் என் நீண்ட வாள் உங்கள் ஊட்டியில் பாய்ந்திருக்கும். உங்களுக்கு அது புரிந்திருக்கிறது. மனிதர்களையும் அவர்கள் திறமையையும் ஆராயும் சக்தி உங்களுக்கிருக்கிறது. இதையெல்லாம் அறிந்துதான் உங்கள் நட்பையும் உதவியையும் நாடி நான் அக்ஷயமுனை வந்தேன். நீங்கள் என்னையோ நான் உங்களையோ கொல்லும் நிலையில் இல்லை." என்று சர்வசாதாரணமாக ஏதோ கதை சொல்பவன் போல் விளக்கிய இளைய பல்லவன் திடீரென ஆசனத்திலிருந்து எழுந்து கோட்டைத் தலைவன் கழுத்தை அசையவொட்டாமல் செய்திருந்த குறுவாளை எடுத்துத் தன் கச்சையில் மீண்டும் செருகிக் கொண்டான். அது மட்டுமின்றி, "ஏன் இவர்களை அனுப்பி விடலாமே." என்று வீரர்களைக் கையால் சுட்டியும் காட்டினான்.

இளையபல்லவனின் செயல்களும் பேச்சும் பெரும் விந்தையாயிருந்தன கோட்டைத் தலைவனுக்கு. அத்தகைய ஒரு விசித்திர மனிதனை அவன் அதுவரை கண்டதில்லை. அந்த மனிதனால் தன்னைத் தாழ்த்தவோ உயர்த்தவோ நிச்சயமாய் முடியும் என்று தீர்மானித்துக் கொண்ட கோட்டைத் தலைவன், தன் வீரர்களைக் கொண்டு அந்த அறையிலேயே அவனை ஒழித்துவிடலாமா என்று மீண்டும் சிந்தித்தான். ஆனால் அதனால் விளையக்கூடிய ஆபத்தை எண்ணி, இவனை ஒழிப்பதானால் அதற்கு இடம் இந்தக் கோட்டையல்ல, சமயமும் இதுவல்ல' என்று தீர்மானித்துக் கொண்டு இளைய பல்லவன் கூறியபடி அறையை விட்டுச் செல்லுமாறு வீரர்களுக்குப் பணித்தான்.

வீரர்கள் சென்றதும் கோட்டைத் தலைவனுக்கு நேர் எதிரில் வந்து நின்றுகொண்ட இளையபல்லவன், "தலைவரே! நான் பயங்கர விரோதி என்பதை உங்களுக்கு நிரூபித்தாகிவிட்டது. சிறந்த நண்பன் என்பதை நிரூபிக்கிறேன். உங்கள் கையிரண்டையும் ஏந்துங்கள்." என்று உத்தரவிடும் தோரணையில் கூறினான்.

அதன்படி கையேந்திய கோட்டைத் தலைவனின் கைகளில் இளைய பல்லவன் கச்சையிலிருந்த பட்டுப் பையிலிருந்து கொட்டப்பட்ட நான்கு பொருட்கள் உருண்டன. உருண்ட அந்தப் பொருட்களைப் பார்த்த கோட்டைத் தலைவனின் கண்கள் அவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்தன. அறையில் அதுவரை நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் சித்தத்திலிருந்து மறைந்தன. கண்களில் விவரிக்க இயலாத வியப்பும் வெறியும் படர்ந்தன. அந்த வியப்பும் வெறியும் கலந்த கண்கள் பயபக்தியுடன் இளைய பல்லவனையும் ஏறெடுத்து நோக்கின. உருண்டவை நான்கு. அவற்றில் புரண்டது பெருங்கதை.

### அசைந்த சிலை?

கச்சையிலிருந்த பட்டுப் பையை எடுத்து அவிழ்த்துக் கண நேரத்தில் தனது கையில் இளையபல்லவன் உருட்டி விட்ட நான்கு பெரும் நல்முத்துகளையும், விழித்த விழிகள் நிலைத்தபடியே நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் அக்ஷயமுனைக் கோட்டையின் தலைவன். இயற்கை யாகவே மிகப் பெரியதாக இருந்த அந்த நல்முத்துகள் மீது வடக்குச் சாளரத்தின் வழியாகப் பாய்ந்த காலைக் கதிரவனின் இருகதிர்கள் அந்த முத்துகளை ஏதோ பெரும் உயிர் வாய்ந்த பிம்பங்களைப்போல் ஜொலிக்க வைத்திருந்தன.

அவற்றின் இயற்கையமைப்பில், கதிரவன் கதிர்கள் அவற்றின் மீது பாய்ந்து கிளம்பிய ஜாஜ்வல்யத்தில் அடியோடு லயித்துவிட்ட கோட்டைத் தலைவன், தனது கரங்களில் அக்ஷயமுனைக் கோட்டையையே விலைக்கு வாங்கக்கூடிய பெரும் செல்வம் உருண்டு கிடப்பதை உணர்ந்தான். அவற்றைப் பார்த்ததுமே அவற்றின் மதிப்பை மட்டுமின்றி, அவை சம்பந்தமாகக் கீழ்த்திசைப் பிராந்தியங்களில் உலாவிய கதைகளையும் நினைத்துப் பார்த்த கோட்டைத் தலைவன், அவற்றைக் கொண்டு வந்த இளைய பல்லவன் அமானுஷ்யமான பிறவியாகத்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். அந்த நான்கு இணையற்ற முத்துகள் பாலித்தீவின் சிற்றரசனுக்குச் சொந்தமாயிருந்ததாகவும், அவற்றைப் பல நாட்டு மன்னர்கள் பல தலைமுறைகளாகக் கைப்பற்ற முயன்றும் பலிக்கவில்லையென்றும், பாலி மன்னர்கள் அவற்றை எங்கே மறைத்து வைத்திருந்தார்களென்பதும் அவன் கேட்டறிந்த விஷயம். ஆகவே இத்தகைய முத்துகள் இளைய பல்லவன் கையில் கிட்டியது பெரும் விந்தையென நினைத்த அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன், 'யாருக்கும் கிடைக்காத இந்த முத்துகள் இவனுக்கு எப்படிக் கிடைத்தன?' என்று சந்தேகத்துடன் தன்னையே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்




நாயகன் துல்கர் சல்மானும், நாயகி அதிதி ராவ்வும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். எப்போதும் பேசிக்கொண்டே இருக்கும் துல்கர் சல்மானின் குணம், அதிதியின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பாதிக்கிறது. இதனால், சைக்காலஜிஸ்ட்டான காஜல் அகர்வாலிடம், தனது கணவரை காதலிப்பது போல நடிக்கச் சொல்லி உதவி கேட்கிறார் அதிதி ராவ்.

துல்கர் காதலில் விழுந்தால் அதை காரணமாக வைத்து அவரைப் பிரிந்துவிட நினைக்கிறார் அதிதி. முதலில் தயங்கும் காஜல் அகர்வால், துல்கர் சல்மானை நெருங்க ஆரம்பிக்கிறார். இறுதியில், துல்கர் சல்மானை அதிதி ராவ் பிரிந்தாரா? காஜல் அகர்வால் துல்கர் சல்மானை காதலித்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் துல்கர் சல்மான், பேசிக் கொண்டே இருக்கும் கதாபாத்திரத்தில் பேசியே ரசிகர்களை கவர்ந்திருக்கிறார். பேசுவது மட்டுமில்லாமல் கணவராக நடித்து இளம் பெண்களை ஏங்க வைத்திருக்கிறார்.

காற்று வெளியிடை, செக்கச் சிவந்த வானம் ஆகிய படங்களில் நடித்த அதிதி ராவ், இந்த படத்தில் இயல்பான நடிப்பை கொடுத்திருக்கிறார். ஒருசில பெண்களின் குணத்தை அப்படியே பிரதிபலிக்கும் ஒரு கதாபாத்திரம். அதை உணர்ந்து சரியாக நடித்து இருக்கிறார். சைக்காலஜிஸ்ட்டாக வரும் காஜல் அகர்வால், வழக்கம் போல் தன்னுடைய அழகால் ரசிகர்களை தன் வசப்படுத்தி இருக்கிறார்.

பல படங்களுக்கு நடன இயக்குனராக பணிபுரிந்த பிருந்தா மாஸ்டர், இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகி இருக்கிறார். முதல் படம் என்று சொல்ல முடியாதளவிற்கு படத்தை இயக்கி இருக்கிறார். ஒரு சில குறைகள் படத்தில் இருந்தாலும் பெரிதாக தெரியவில்லை. மதன் கார்க்கியின் கதையும், திரைக்கதையும் படத்திற்கு பலம்.

கோவிந்த் வசந்தா இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் அதிக ஸ்கோர் செய்திருக்கிறார். பிரீத்தா ஜெயராமன் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்திருக்கிறது.

# விஜய் சேதுபதிக்கு கிடைத்த சிறப்பு கௌரவம்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக திகழும் விஜய் சேதுபதியை ஐக்கிய அரபு கௌரவப்படுத்தியுள்ளது.

அமீரக அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு விசா வழங்கும் நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தது. இதன் ஒரு பகுதியாக அமீரகத்தில் வசிக்க விரும்பும் வர்த்தகர்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் அமீரகத்தை சேர்ந்த நிறுவனம் அல் லது தனிநபர் ஆதரவு இல்லாமல் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு வசிக்கும் வகையில் கோல்டன் விசா அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த விசாவானது புதுப்பித்துக்கொள்ளும் வசதி கொண்டது ஆகும்.

சமீபத்தில் நடிகை திரிஷா, நடிகர் பார்த்திபன் உள்ளிட்ட பலருக்கு அமீரகம் கோல்டன் விசா வழங்கி கௌரவித்த நிலையில் தற்போது நடிகர் விஜய் சேதுபதிக்கு கோல்டன் விசா வழங்கி கௌரவித்துள்ளது.

# பிரபல இயக்குனருடன் இணையும் சூர்யா

சூர்யா நடிப்பில் தற்போது உருவாகியுள்ள திரைப்படம் "எதற்கும் துணிந்தவன்". சன் பிக்சர்ஸ் தயாரித்திருக்கும் இப்படத்தில் பிரியங்கா அருள் மோகன், சத்ய ராஜ், ராதிகா, சூரி, சரண்யா பொன்வண்ணன், தேவதர்ஷினி, தங்கதுரை, இளவரசு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். பசங்க படத்தின் மூலம் அறிமுகமான பாண்டிராஜ் இப்படத்தை இயக்கி இருக்கிறார். மார்ச் 10 ஆம் திகதி திரையரங்குகளில் இப்படம் வெளியாகிறது.

இதனை தொடர்ந்து சூர்யா அடுத்து நடிக்க இருக்கும் படம் குறித்து ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர். இந்நிலையில் சூர்யாவின் அடுத்த படத்தை, முண்டாசுப்பட்டி, ராட்சசன் படங்களை இயக்கிய ராம்குமார் இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இவர் இயக்கிய ராட்சசன் திரைப்படம் பெரு வாரியான ரசிகர்களை கவர்ந்து வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பு பெற்றிருந்தது. இந்த கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# ரூ. 200 கோடியை நெருங்கி விட்டதா

## அஜித்தின் வலிமை- இதுவரையிலான முழு வசூல்

அஜித்தின் வலிமை திரைப்படம் கடந்த 24ம் தேதி உலகம் முழுவதும் மாஸாக வெளியாகி இருந்தது.

இதில் கதை, பாடல்கள் என அனைத்தையும் தாண்டி அஜித்தின் பைக்ரேஸ் காட்சிகள் ரசிகர்களால் அதிகம் கொண்டாடப்பட்டது.

இப்போது அஜித் தனது 61 ஆவது படத்திற்காக தயாராகி வரும் நிலையில் அவரது வலிமை திரைப்படம் செம வசூல் வேட்டை நடத்துகிறது. தற்போது வரை படம் ரூ. 197 கோடி வரை வசூலித்துள்ளதாம், தமிழ்நாட்டில் மட்டும் ரூ. 136 கோடி வசூலித்திருக்கிறது.

இதற்குள்ளே அஜித்தின் ரசிகர்கள் வலிமை படம் ரூ. 200 கோடி கிளப்பில் இணைந்துவிட்டதென டிரண்ட் செய்து கொண்டாடி வருகிறார்கள்.

# 25 ஹீரோயினை கல்யாணம் செய்திருக்கிறேன்

கதாநாயகனாக நடித்து தற்போது பல படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வரும் சத்யராஜ், ராதே ஷ்யாம் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு பேசினார்.

யுவி கிரியேஷன்ஸ் பேனரில் வம்சி மற்றும் பிரமோத் தயாரிப்பில், ராதா கிருஷ்ண குமார் இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் 'ராதே ஷ்யாம்'. இப்படத்தில் பிரபாஸ் நாயகனாகவும், பூஜா ஹெக்டே நாயகியாகவும் நடித்துள்ளனர். மார்ச் 11 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், தமிழ் பதிப்பிற்கான பத்திரிக்கையாளர் சந்திப்பு நேற்று சென்னையில் நடைபெற்றது.

இவ்விழாவினில் நடிகர் சத்யராஜ், சிபிராஜ், உதயநிதி, தயாரிப்பாளர் செண்பகமூர்த்தி, உட்பட்ட தமிழ் பிரபலங்களுடன், ராதே ஷியாம் படக்குழுவினர் பிரபாஸ், பூஜா ஹெக்டே, இயக்குனர் ராதா கிருஷ்ண குமார், ஒளிப்பதிவாளர் மனோஜ் பரமஹம்சா, பாடலாசிரியர் மதன் கார்க்கி தயாரிப்பாளர் பிரமோத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் சத்யராஜ் பேசும்போது, பிரபாஸை நாங்கள் டார்லிங் என சொல்வோம், டார்லிங்கின் டார்லிங் பூஜா. கடவுள் நம்பிக்கை இல்லாமல் கைரேகை நிபுணராக நடித்திருக்கிறேன் என கேட்கிறார்கள். பெரியார் படத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன், ஜெர்ஸி படத்தில் கிரிக்கெட் கோச்சாக நடித்திருக்கிறேன் அப்படிதான் எடுத்து கொள்ள வேண்டும்.

நான் ஹீரோவாக நடிக்கும் போது 25 ஹீரோயினை கல்யாணம் செய்திருக்கிறேன், அதை என்ன சொல்வது. நடிப்பை நடிப்பாக மட்டும் எடுத்துகொள்ள வேண்டும். இந்தப்படம் மிக அழுத்தமான காதல் கதை, பிரபாஸ் பறந்து சண்டை போடுவார் என்றால், இதில் கப்பலே பறக்கிறது. இங்கு ஜேம்ஸ் கேமரூன் தான் வந்திருக்க வேண்டும். அவ்வளவு பிரமாண்டமாக இருக்கிறது.

பிரபாஸின் அழகுக்காகவே எடுக்கப்பட்ட படம் இது. ஒவ்வொரு காட்சியும் அவ்வளவு அழகாக இருக்கிறது. பாகுபலிக்கு பிறகு பிரபாஸுக்கு முக்கியமான பொறுப்பு வந்துள்ளது.

பான் இந்தியா என்று எல்லா ஸ்டேட்டிலிருந்து ஒரு நடிகரை போட்டு எடுக்கிறார்கள். ஆனால் இந்தப்படம் உண்மையில் பான் இன்டர்னேஷனல் படம். உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் நன்றி' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | : | அன்புள்ள அப்பா |
| இயற்றியவர் | : | வைரமுத்து |
| இசை | : | சங்கர் கணேஷ் |
| பாடியவர் | : | கே.ஜே.யேசுதாஸ் |



மரகதவல்லிக்கு மணக்கோலம்
என் மங்கலச் செல்விக்கு மலர்க்கோலம்

கண்மணித் தாமரை
கால் கொண்டு நடந்தால்
கண்களில் ஏன் இந்த நீர்க்கோலம்
கோலம் திருக்கோலம்

மரகதவல்லிக்கு
மணக்கோலம்
என் மங்கலச் செல்விக்கு
மலர்க்கோலம்

கண்மணித் தாமரை
கால் கொண்டு நடந்தால்
கண்களில் ஏன் இந்த நீர்க்கோலம்
கோலம் திருக்கோலம்

காலையில் கதம்பங்கள்
அணிந்திருப்பாள்
மாலையில் மல்லிகை முடிந்திருப்பாள்
திங்களில் சாமந்தி வைத்திருப்பாள்
வெள்ளியில் முல்லைகள் சுமந்திருப்பாள்

கட்டித் தங்கம் இனி மேல் அங்கே
என்ன பூவை அணிவாளோ
கட்டிக் கொண்ட கணவன் வந்து
சொன்ன பூவை அணிவாளோ
தினந்தோறும் திருநாளோ

மரகதவல்லிக்கு மணக்கோலம்
என் மங்கலச் செல்விக்கு மலர்க்கோலம்

கண்மணித் தாமரை
கால் கொண்டு நடந்தால்
கண்களில் ஏன் இந்த நீர்க்கோலம்
கோலம் திருக்கோலம்

ஹா..அஆஅஆ..ஆஅ..
ஹா..ஆஅ.ஆஅ.ஆஅ.ஆஅ..

மலர் என்ற உறவு பறிக்கும் வரை
மகள் என்ற உறவு கொடுக்கும் வரை
உறவொன்று வருவதில் மகிழ்ந்து விட்டேன்
உறவொன்று பிரிவதில் அழுது விட்டேன்

எந்தன் வீட்டு கன்று இன்று
எட்டி எட்டிப் போகின்றது
கண்ணின் ஓரம் கண்ணீர் வந்து
எட்டி எட்டிப் பார்க்கிறது
இமைகள் அதை மறைக்கிறது
மரகதவல்லிக்கு மணக்கோலம்

# செட்டிலான பட்மேனையும் திணறடிக்கும் வித்தகர் ஷேன் வோர்னர்

டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி எண்ணற்ற வெற்றிகள் பெறவும் ஒரு பதினைந்து ஆண்டுகள் யாராலும் வீழ்த்த முடியாத அணியாகவும் இருந்ததில் வோர்னேவின் பங்கு அளப்பரியது.

நூறாண்டுகளுக்கு ஒரு முறை தான் சில விளையாட்டு வீரர்கள் அவதரிப்பார்கள். அவர்களுக்கு முன்னும் அப்பேர்ப்பட்ட ஆட்டக்காரர்களை உலகம் சந்தித்திராது. அவர்களுக்குப் பின்னும் அந்த இடம் நிரப்பப்படாமலேயே இருக்கும். அப்படிப்பட்ட ஒரு விளையாட்டு வீரர் தான் இதுவரை உலகில் தோன்றிய லெக்ஸ் பின்னர்களிலேயே சிறந்தவரான ஷேன் வோர்னே. அவர் வீசிய நூற்றாண்டின் சிறந்த பந்து எப்படி கிரிக்கெட் உலகெங்கும் அதிர்வலைகளை கிளப்பியதோ அதைவிட ஆயிரம் மடங்கு அவர் இறந்த செய்தி தற்போது கிரிக்கெட் உலகை அதிரவைத்திருக்கிறது.

சாஸ்திரியின் விக்கெட்டை மட்டும் எடுத்திருந்தார். அடுத்த டெஸ்டில் விக்கெட்டே இல்லை. ஐந்தாவது டெஸ்ட் வேகப் பந்து வீச்சின் சொர்க்கமான பெர்த்தில். அந்த மட்ச்சுக்கு வோர்னேவை கழற்றி விட்டு விட்டார்கள். இப்படியாக தன் முதல் டெஸ்ட் தொடரில் 200 ரன்களுக்கு மேல் விட்டுக் கொடுத்து ஒரே ஒரு விக்கெட் மட்டுமே எடுத்திருந்தார் வோர்னே.

ஆனால், அவர் உள்ளூர் போட்டிகளில் ஆடியிருந்த விதத்தைப் பார்த்து அடுத்தடுத்து இலங்கை, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து தொடர்களுக்கு தேர்வு செய்யப்பட்டார். இந்தத் தொடர்களிலும் அவர் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை.

ஆனால், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒரு டெஸ்டில் அப்போது அவர்களின் கப்டனாக இருந்த ரிச்சிரிச்சர்ட்சனின் விக்கெட்டை ஒரு ஃப்லிப்பரின் மூலம் வீழ்த்தி இவருக்


நான்கு இன்சிற்குள் கிராஸ் செய்யும் டெலிவரி. பெரிய டீவியேசன் இருக்காது. மற்ற லெக்ஸ் பின்னர்களை அடிப்பது போல அசால்டாக ஸ்கொயர்கட் எல்லாம் செய்ய முடியாது. மீறி அடித்தால் விக்கெட் கீப்பர் அல்லது பர்ஸ்ட்சிலிப்பில் போய் உட்காரும். கவனமாகத் தடுத்து ஆடாவிட்டாலும் எட்ஜ் எடுத்து விடும்.

**இரண்டாவதுஃபிலிப்பர்:**

நன்கு செட்டில் ஆன பட்ஸ்மேன்களை கூட மிரட்டி விடும் டெலிவரி இதுதான். பிட்சான உடன் லோபவுன்ஸில் நேராகவும் விரைவாகவும் வரும். பெரும்பாலான பட்ஸ்மேன்கள் எல்.பி.டபிள்யூ அல்லது போல்ட் ஆகிவிடுவார்கள்.

**மூன்றாவது கூக்ளி:**

வோர்னே எக்கச்சக்கமாக கூக்ளி போடமாட்டார். அதை பட்ஸ்மேன்னைத் திகைக்க வைக்கும் அஸ்திரமாகத்தான் அரிதாகப் பயன்படுத்தினார்.



90களில் கிரிக்கெட் பார்த்தவர்களுக்குத்தான் ஷேன் வோர்னேவின் ஜாம்பவான் தன்மை முழுமையாகப் புரியும். எல்லா பட்ஸ்மேன்களும் அவரை எதிர்கொள்ள பல தூக்கமில்லா இரவுகளைச் சந்தித்தார்கள். அவர் வீசும் ஒவ்வொரு டெலிவரியையும் வர்ணனையாளர்கள் நூறு கண் கொண்டு பார்த்தார்கள். பார்வையாளர்கள் அங்கிங்கு அசையாமல் ஒரு தேர்ந்த நடனத்தை எப்படிப் பார்ப்பார்களோ அப்படிப்பார்த்தார்கள்.

1992 ஒருநாள் உலகக் கோப்பை டெஸ்ட் சீரிஸில் முதல் இரண்டு டெஸ்ட்களில் அடி வாங்கி மூன்றாவது டெஸ்ட் விளையாட சிட்னிக்குச் சென்றது இந்தியா. சிட்னி நமது அணி குறைவாக அடிவாங்கும் மைதானம். அந்த டெஸ்டுக்கு முந்தைய நாள் செய்திகளில் ஷேன் வோர்னே என்ற லெக்ஸ் பின்னர் அறிமுகமாகப் போவதாகக் காட்டினார்கள்.

டெஸ்ட் தொடங்கியது. ரவி சாஸ்திரி இரட்டைச் சதம் அடிக்க சச்சின் சதம் அடிக்க [illegible] வோர்னே 150 ரன்னுக்கு மேல் கொடுத்து

குள் ஏதோ இருக்கிறது என எல்லோரையும் எண்ண வைத்தார்.

1993 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடருக்காக இங்கிலாந்து மண்ணில் கால் வைத்தது அவுஸ்திரேலியா. அப்போது யாருக்கும் தெரியாது. இந்தத் தொடர் முடியும் போது ஒரு உலக சம்பியன் உருவாகியிருப்பார் என்று! முதல் டெஸ்டில் வோர்னேவின் முதல் டெலிவரி மைக்கேட்டிங்கிற்கு. ஸ்பின்னர்களை நன்கு ஆடக் கூடியவர் அவர். ஆனால் அவரையும் ஏமாற்றி லெக்ஸ்டம்பிற்கு வெளியே விழுந்து பாம்பு போல சீறி கேட்டிங்கின் கால்காப்பு, பட்டைத் தாண்டி ஆப்ஸ்டம்ப் பெயில்ஸை வீழ்த்தியது. கேட்டிங்கால் அதை நம்ப முடியவில்லை. அந்தத் தொடரில் உலகின் கவனத்தை ஈர்த்தார் வோர்னே. அன்று தொடங்கியது வார்னேவின் ஆட்சி.

**வோர்னேவின் பந்து வீச்சில் நான்கு முக்கிய வெரைட்டிகள்:**

**முதலில் வழக்கமான லெக் ஸ்பின்:**

மிடில் அண்டு ஆப்ஸ்டம்பில் விழுந்து ஆப்ஸ்டம்பை

**நான்காவதுதான்வோர்னே ஸ்பெசல்:**

லெக்ஸ்டம்பிற்கு மிக வெளியே ஏழாவது எட்டாவது ஸ்டம்பில் விழுந்து, பட்ஸ்மேனின் லெக்ஸ்டம்பைத் தகர்க்கும் டெலிவரி. எத்தனை பட்ஸ்மேன்கள் அதில் விழுந்திருக்கிறார்கள், கணக்கே இருக்காது. இயன்ஹீலே கீப்பராக இருந்த காலகட்டத்தில் இதை ஒரு ட்ரிக்காகவே செய்வார்கள்.

டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி எண்ணற்ற வெற்றிகள் பெறவும் ஒரு பதினைந்து ஆண்டுகள் யாராலும் வீழ்த்த முடியா அணியாகவும் இருந்ததில் வோர்னேவின் பங்கு அளப்பரியது.

96 உலகக்கோப்பை பைனலில் அரவிந்தடிசில்வா, ரணதுங்கா இணை கவனமாக ஆட அந்தப்போட்டியில் ஆஸியால் வெற்றி பெற முடியவில்லை. 99 இல் கோப்பையை வென்றனர். 2003 உலக கோப்பையில் ஊக்க மருந்து சர்ச்சை காரணமாக டோர்னமெண்டில் இருந்து வெளியேற்றப்பட்டார் வோர்னே. இல்லையென்றால் இரண்டு உலகக் கோப்பை வாங்கிய பிளேயர்கள் லிஸ்டில் நிச்சயம் இடம் பிடித்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரா (ஜோர்டான்)



ஒரு நகரமே ரோஜா வண்ணத்தில் தோற்றமளித்தால் எத்தனை அற்புதமாக இருக்கும். ஏதோ கனவில் தோன்றிய காட்சியோ அல்லது ஓவியனின் கற்பனையில் மிளிர்ந்த ஓவியம் என்றோ கருத வேண்டாம்.

உண்மையில் அப்படி ஒரு நகரம் 2 ஆயிரம் வருடங்களுக்கு முன் மேற்கு ஆசியாவிலுள்ள ஜோர்டான் தேசத்தில் இருந்திருக்கிறது. புதையுண்ட நகரம் அல்லது மறைந்த நகரம் என்று சரித்திர வல்லுனர்களால் அழைக்கப்படும் பெட்ரா தான் அந்தப் பேரெழில் நகரம்.

சவுதி அரேபியாவுக்கு அருகில் அமைந்துள்ள சிறிய நாடுதான் ஜோர்டான். கி.மு நான்காம் நூற்றாண்டில் ஜோர்டான் பிரதேசத்தை ஆண்டுவந்த நபாட்டியன்கள் காலத்தில் பெட்ரா நகரம் உருவாக்கப் பட்டது.

செலா என்று பண்டைய காலத்தில் அழைக்கப்பட்ட அந்த நகரம் பிற்காலத்தில் பெட்ரா என அழைக்கப்பட்டது. பெட்ரா என்றாலும் செலா என்றாலும் பாறை என்றுதான் பொருள். மணல் கல் வகையைச் சேர்ந்த அந்த பாறைகள் வெள்ளை மற்றும் ரோஜா வண்ணத்தில் காட்சி அளிக்கும் தன்மை உடையவை.

குகை ஓவியங்கள் குகைச் சிற்பங்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் பெட்ராவில் உள்ள பெரும்பாலான கட்டடங்கள் ஆலயங்கள் கல்லறைகள் ஆகியவை பாறைகளில் குடையப்பட்டு உருவாக்கப்பட்டவை.

இன்றைய ஜோர்டான் தலைநகர் அம்மானிலிருந்து சுமார் 250 கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் மா அன் மாகாணத்தில் உள்ள பெட்ரா நகரைச்சுற்றி அன்றைக்கு கலைத்தாகம் மிக்க மெசபடோமிய தாட்மூர் அரேபிய அரசுகள் இருந்ததால் இயல்பாகவே கலை ஆர்வமும் நுணுக்கங்களும் பெட்ரா நகர மக்களுக்கு இருந்தன. கிரேக்க அரேபிய கோரிந்திய வகை வேலைப்பாடுகளை பாறைகளின் சிற்பங்கள் தூண்கள் அலங்காரவளைவுகளில் காணமுடியும்.

பெட்ரா நகரம் அதன் கலைப் படைப்புகளுக்காக மட்டுமின்றி நீர் விநியோகம் நீர்ப் பாசன முறைகளுக்காகவும் கவனப் படுத்தப்படுகிறது. அவர்கள் கட்டிய மகா அணை வெள்ளப் பெருக்கின் போது மிகுதியாக வந்த தண்ணீரைச் சேகரிக்கவும் மழைக்காலத்தில் பெருகி வரும் உபரி நீரைத் தேக்கவும் பயன் பட்டிருக்கிறது. அந்த அணையையே நவீன காலத்தில் தேவைக்கேற்ப சில மாறுதல்களுடன் 1964 ஆம் வருடம் முதல் ஜோர்டான் அரசு பயன்படுத்திவருகிறது. என்றால் நபாட்டியன்கள் காலத்து பொறியியல் அறிவு எத்தனை மகத்தானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கி.மு. 312 ஆம் ஆண்டு வாக்கில் உருவாக்கப்பட்ட பெட்ரா நகரம் கி.பி 363 இல் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பத்தின் காரணமாகவும் கி.பி 700 ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாகவும் மண்ணுக்குள் முழுமையாக புதைந்து போய்விட்டது.

(தொடரும்...)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2527

**சாருகேசினி**

ஞாயிற்றுக்கிழமை கறி வாங்க போறதுல இருக்கிற ஆர்வம் திங்ககிழமை வேலைக்கு போறதுலயும் இருக்கனும் மங்குனியாரே



**விஜிந்தன்**

என்னடா சொல்றிங்க உக்ரைனுக்கும் ரஷ்யாக்கும் போர் நடக்குதா



சண்டைக்கு ஆள் பத்தல நா சொல்லுங்க நம்ம பப்ஜி பிளேயர்ஸ் ஒரு பத்து பேரும் பிரீ பயர் பிளேயர்ஸ் ஒரு இருபது பேரையும் பிலைட்ல அனுப்பி வைக்குறோம்.

**வைஸ்ணவி**

வர வர போன் யூஸ் பண்றதும் போர் அடிக்குததே



ஒரு வேளை திருந்திட்டு வரோமோ

**பார்த்தீபன்**



என்னது ரஷ்யா உக்ரைன் மேல போட்ட குண்டு வெடிச்சதுல கொரோனாவும் மாட்டிகிட்டு செத்து போயிடுச்சா........

**டிலக்ஷா**

உனக்காக யாரும் இல்லை என்று நீ கவலைப்படுவதை விட



யாருக்கும் நீ பாரமாக இல்லை என்பதை நினைத்து சந்தோஷப்படு

**சரண்**



காதலனை ரசிக்கும் காதலியை விட.... கணவனை ரசிக்கும் மனைவி தான் அழகு..




நமக்கு காதலியும் அமையல.. மனைவியும் அமையல... நம்ம தல விதி.....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்[illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

281

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கேள்வி பதில் ....

**பசுப்பாலா ஆடை நீக்கிய பால்மாவா சிறந்தது?**

அதிகரித்த கொலஸ்ரோல் நிலை உள்ளவர்களுக்கு பொதுவாக ஆடை நீக்கிய பால் மாவகை (Non-fat) சிபார்சு செய்யப்பட்டு வருகின்றது. இந்த வகை பால்மாவிலே பசுப்பாலுடன் ஒப்பிடுகையில் கொழுப்பின் அளவு குறைவு என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த வகையான பால்மா உற்பத்தியின் பொழுது பாலுக்கு பலவகையான செயற்கையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அத்துடன் பல்வேறு வகையான இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

இதனால் பாலின் இயற்கையான சுவையும் குன்றிப் போகின்றது. அத்துடன் இதன் விலையும் ஒப்பீட்டளவில் அதிகமாகும்.

ஆடை நீக்கிய பால்மா வகைகளுடன் ஒப்பிடும் பொழுது பசுப்பால் இயற்கையானது. இரசாயனங்கள் எதுவும் சேர்க்கப்படாதது. சுவையானது. மலிவானது. அனைத்து வகையான இயற்கையான ஊட்டச்சத்துக்களை கொண்டது. பசுப்பாலிலே கொழுப்பு வீதம் சற்று அதிகமாக இருந்தாலும் அது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. காரணம் மனிதன் உண்ணும் உணவின் கலோரி பெறுமானத்தில் 30% கொழுப்பு இருக்க வேண்டும். அந்தக் கொழுப்பு பால்மூலம் எமக்கு கிடைப்பது தீங்கு எதனையும் செய்து விடாது.

எனவே இயற்கையான உடன் பசுப்பால் ஆடை நீங்கிய பால்மா வகைகளிலும் பார்க்க சிறந்தது. அதிகரித்த கொலஸ்ரோல் நிலை உள்ளவர்களும் பசுப் பாலை பாதுகாப்பாக அருந்த முடியும்.

**நீரிழிவு உள்ளவர்கள் பழங்களை உண்ணலாமா?**

ஆம். கனிந்து பழுக்காத பழவகைகளை உண்ண முடியும். பதப்படுத்தப்பட்ட பழவகைகளை அதாவது இறக்குமதியாகி வரும் பேரீச்சம்பழங்கள் உலர்த்திய பழவகைகளை தவிர்த்துவிடுவது நல்லது. பழவகைகள் உண்ணும் பொழுது குருதி வெல்லமட்டம் தற்காலிகமாக சற்று அதிகரித்தாலும் உடன் பழங்களை உண்ணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் மிக அதிகம்.

**பழவகைகளை எவ்வேளையில் உண்ணுவது சிறந்தது?**

உணவு உண்பதற்கு முன் பழவகைகளை உண்டு அதன் பின் உணவு அருந்துவது நல்லது. இது நாம் உண்ணும் உணவின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் சமிபாட்டு நொதியங்கள் வினைத்திறனுடன் தொழிற்படுவதற்கும் உதவும்.

**தீட்டாத சிவப்பு அரிசி மாவா அல்லது ஆட்டாமாவா உடல் நலத்திற்கு நல்லது?**

ஆட்டாமாவில் இருப்பது கோதுமை மாவும் வெள்ளை தவிடும். தீட்டாத சிவப்பு அரிசி மாவில் இருப்பது சிவத்ததவிடும் அரிசிமாவும். அரிசிமா கோதுமை மாவிலும் சிறந்தது என்பது எம் அனைவருக்கும் தெரியும். சிவத்த தவிடு வெள்ளைத் தவிடிலும் பார்க்க ஊட்டச்சத்து கூடியது என்பதும் எமக்குத் தெரியும்.

அதன் காரண மாகத்தான் ஆடு, மாடு போன்ற வற்றிற்கு கூட சிவத்த தவிட்டை வாங்கி வைக்கின்றோம். எனவே ஆட்டாமாவிலும் பார்க்க தீட்டாத சிவத்த அரிசிமா சிறந்தது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.



**வைத்தியசாலைக்கு சென்று குருதி அமுக்கத்தை அளக்கும் சந்தர்ப்பங்களில் பதற்றம் காரணமாக எனது குருதி அமுக்கம் தற்காலிகமாக அதிகரிக்கிறது. இதன் காரணமாக எனது உண்மையான குருதி அமுக்கத்தை கண்டறிவது கடினமாக உள்ளது. இதற்கு என்ன செய்யலாம்?**

நீங்கள் டிஜிற்றல் குருதி அமுக்கம் அளக்கும் கருவி ஒன்றை வீட்டில் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நீங்களாகவே உங்கள் குருதி அமுக்கத்தை அளந்து பதித்து வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் வைத்தியரை சந்திக்கும் பொழுது அந்த வாசிப்புகளை காண்பியுங்கள்.

உங்கள் குருதி அளக்கும் கருவியையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்தும் உங்கள் குருதி அமுக்கத்தை அளந்து பாருங்கள். இவற்றிலிருந்து உங்கள் குருதி அமுக்கம் தற்காலிகமாக அதிகரிக்கிறதா? உங்களின் உண்மையான குருதி அமுக்கம் என்ன? என்பவற்றை அறிந்து கொள்ளலாம்.

**மெற்போமின் மாத்திரை சிறுநீரகங்களை பாதிக்குமா?**

இல்லை. மெற்போமின் மாத்திரையே நீரிழிவு நிலைக்கு பாவிக்கப்படும் மாத்திரைகளில் அதிவிசேடமானது. பாதுகாப்பானது. ஆனால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நீரிழிவு நோயாளர்களுக்கு இந்த மாத்திரையை பாவிக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இவர்களுக்கு மெற்போமின் தவிர்ந்த ஏனைய மருந்துகளே வழங்கப்படுகின்றது.

**நீரிழிவு நிலை உள்ளவர்கள் உருளைக் கிழங்கு உண்ணலாமா?**

ஆம். உண்ண முடியும். 100 கிராம் உருளைக் கிழங்கிலே 20 கிராம் அரிசிமாவில் இருக்கும் மாப்பொருளே இருக்கிறது. எனவே உணவில் சோறு, இடியப்பம், பிட்டு போன்ற மாப் பொருட்களை குறைத்து அதற்கு பதிலாக உருளைக்கிழங்கை சேர்த்துக் கொள்ளலாம்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thetamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org